தி.க 1817

# மணியோசை

## ஜப்பானியக் கதைகள்

ஜோதி நிலையம்

...ள்

...டு ●

... ஆசை
(...மெரிக்கக் கதை)

வழிப்பறவைகள்
(டேனிஷ் கதை)

மணியோசை
(ஜப்பானியக் கதை)

★ அடுத்து வருபவை

செவிலித்தாய்
(இத்தாலியக் கதை)

கிரிஷ்கா
(டட்ரக் கதை)

மந்திர ஜாடி
(ஆங்கிலக் கதை)

விஷ வித்து
(ஜெர்மன் கதை)

அடிமைப் பெண்
(ஸ்வீடிஷ் கதை)

கணிகை
(...ஞ்சுக் கதை)

...வெளிவருகின்றன

Acl-mku
00609

# ஜப்பானியக் கதைகள்

A/133

டி. கே. ஷண்முகம்
ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா.

டி. கே. ஷண்முகம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
டி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

விலை எட்டணா

HIGGINBOTHAMS
C

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்

# சர்வதேச நாவல்கள்

---

**மாய சந்யாசி (அச்சில்)**

ஆண்டன் செக்காவ் எழுதிய ரஷ்ய நாவல்

ரா. ஸ்ரீ. தேசிகன் மொழிபெயர்ப்பு விலை ரூ. 1-0-0

**பிள்ளைப் பாசம் (அச்சில்)**

ஸெக்கோஸ்லாவேகியநாவல்

தி. ராமச்சந்திரசர்மா மொழிபெயர்ப்பு விலை ரூ. 1-0-0

**ரத்த விடுதி (அச்சில்)**

ஹோனரே டிபால்ஸாக் எழுதிய பிரஞ்சு நாவல்

ப. திருமலை மொழிபெயர்ப்பு விலை ரூ. 1 0 0

இன்னும் பல நாட்டு அறிஞர் எழுதிய சிறந்த நாவல்களும் வெளிவருகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# மணியோசை

ஜப்பானியக் கதை

---

மொழிபெயர்ப்பு
'புதுமைப்பித்தன்'

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி சென்னை

சர்வதேசக் கதை மலர் - 13

முதற் பதிப்பு 1945

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 397
நன்கொடை எண்: 397

உள்ளடக்கம்

முன்னுரை
1. மணியோசை
2. எமனை ஏமாற்ற
3. அஷ்டமா சித்தி
4. மகளுக்கு மணம் செய்து வைத்தார்கள்
5. சிரித்தமுகக்காரன்

## முன்னுரை

ஜப்பானிய இலக்கிய வளர்ச்சிபற்றி போதுமான அளவில் அறிந்து கொள்ளுவதற்கு ஒத்தாசையாக தகுந்த புஸ்தகங்கள் கிடைப்பது அருமையாக இருக்கிறது. லவ் கேடியோ ஹெர்ண் ஆங்கிலத்தில் தொகுத்துள்ள புஸ்தகத்தைப் பார்த்தால் ஆசிய நாகரிகத்தின், கலாசாரத்தின் போக்கு ஒரே அமைதியில்தான் இருக்கிறது என்பது தெரியவரும். பெயர்களை மட்டும் சற்று மாற்றிவிட்டால், கதைகளில் வருகிறவர்கள் நம்மூர் வாசிகளாகி விடுவார்கள். அவ்வளவு நெருங்கிய பந்தம் இருக்கிறது. இது பழைய வளமை.

இதிலுள்ள முதல் மூன்று கதைகளும் லாவ் கேடியோ ஹெர்ண் என்பவர் ஆங்கிலத்தில் தொகுத்துள்ள 'ஜப்பானியக் கதம்பம்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

இந்த யுத்தத்துக்குமுன் மேல்நாட்டு நாகரிகம், ஜப்பானை அமெரிக்கா மூலமாக எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பதற்கு 'மகளை மணம் செய்து வைத்தார்கள்' என்ற கதை தகுந்த சான்று. பிரிட்டிஷ் பரவங்களை யொட்டி நமது மனப்பான்மைகள் மாறி கலாசாரம் ஒரு இரண்டுங் கெட்டான் விவகாரமாக நிற்பதைப் போலத்தான் அங்கும் இந்தச் சரக்கு இறக்குமதியாகி இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். இந்த ஆசிரியரைப் பற்றியோ இவரது இதர கதைகளைப்பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. பல சரக்குக் கடைப் பொட்டணக் கடுதாசியிலிருந்து இந்தக் கதையை வாசித்தேன். வெகு காலத்துக்கு முன்பு இதை மொழி பெயர்

த்து வைத்திருந்தேன். கதம்ப விபரீதத்துக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டு.

டோஷியோ மோரியின் 'சிரித்தமுகக்காரன்' என்ற கதை அமெரிக்காவில் சாசுவதமாக குடியேறிவிட்ட ஒரு ஜப்பானியனின் ஏக்கத்தையும் வேதனையையும் காட்டுவது. அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'நியூ டைரக்ஷன்' என்ற இலக்கிய விசாரப் பத்திரிகையிலிருந்து பெயர்த்து எழுதப்பட்டது.

**புதுமைபித்தன்**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

## மணியோசை

"நான் சாவதற்குப் பயப்படவில்லை" என்ருள் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த மனைவி.

"இப்பொழுது என் கவலை எல்லாம் ஒன்றே ஒன்று தான்; நான் போன பிறகு யாரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?"

வேதனைப்பட்டுக்கொண்டிருந்த கணவன் சொன்னுன்: உனக்குப் பதிலாக யாரும் இந்த வீட்டில் காலடிவைக்க மாட்டார்கள்; நீ போய் விட்டால் கலியாணமே செய்து கொள்ளமாட்டேன்."

அவன் இவ்வார்த்தையை சொன்ன போது மனப்பூர்வமாகத்தான் சொன்னுன்; அவள் மீது அவ்வளவு ஆசை அவனுக்கு.

"இது ஸாமுராய் வாக்குத்தானே" என்று கேட்டாள் மனைவி.

"சத்தியமாகச் சொல்லுகிறேன் இது ஸாமுராயின் வாக்குத்தான்" என்று முகத்தைத் தடவிக் கொடுத்தான் கணவன்.

"அப்படியானல் நம்முடைய தோட்டத்திலேயே என்னை அடக்கம் செய்து விடுவீர்களா? அந்தக் கோடியிலே நாம் இரண்டு பேரும் நட்டுவைத்தோமே அந்த சீமை வாதுமை நிழலில், வெகு நாட்களாகவே இதைக் கேட்க வேண்டும் என்று எனக்கு ஆசை; நீங்கள் ஒரு வேளை கலியாணம் செய்துகொண்டால்,

என்னுடைய கல்லறை, வீட்டருகில் இருப்பது உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் தான் வேறொருத்தி வரமாட்டாள் என்று வாக்குக் கொடுத்து விட்டீர்களே, அதனால் என் ஆசை யைச் சொன்னேன். நான் தோட்டத்திலிருந்தால், உங்கள் குரல் கேட்கும்; வசந்தத்து பூக்களை பார்க்கவும் முடியும்" என்றாள்.

"உன் ஆசையை நடத்திவைக்கிறேன்; இப்பொழுதே ஏன் அடக்கத்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறாய். உன் உடம்புக்கு அவ்வளவு மோசமில்லையே?" என்றான்.

"எனக்கு நம்பிக்கை இல்லை. காலையிலே நான் செத்துப்போவேன்......நீங்கள் என்னைத் தோட்டத்தில் தானே புதைத்து விடுவீர்கள்?" என்று மறுபடியும் கேட்டாள்.

"ஆமாம்: நாம் நட்டுவைத்த அந்த சீமை வாதுமை நிழலில்......உனக்கு அழகான கல்லறை கட்டி வைக்கிறேன்" என்றான் கணவன்.

"எனக்கு ஒரு மணி கொடுப்பீர்களா?"

"மணியா......என்ன மணி?"

"ஆமாம்; மணிதான். என்னுடன் ஒரு மணியையும்,—பித்த பிக்ஷுக்கள் கொண்டு நடக்கிறார்களே— அந்தமாதிரி மணி ஒன்றையும் என்னுடன் வைத்து அடக்கம் பண்ணி விடுங்கள்."

"மணியும் தருகிறேன்; வேறு என்ன வேண்டும் உனக்கு?"

"இனி ஒன்றும் வேண்டாம். இருக்கிறவரை என்னை ஆசையோடு வைத்திருந்தீர்கள்; இனிமேல்

சந்தோஷமாக செத்துப்போவேன் " என்று சொல்லிக் கண்ணை மூடினாள், உயிர் அகன்றது. செத்தும் தூங்குவது போலத்தான் கிடந்தாள். முகத்திலே ஒரு புன் சிரிப்பு இருந்தது.

அவள் ஆசைப்பட்டபடி தோட்டத்திலே அவளை அடக்கம் பண்ணினார்கள். அழகான கல்லறை கட்டினார்கள்: "கருணாஸாகர மாளிகையில், ஒளி மிகுந்த சிமை வாதுமை நிழல் மண்டபத்தில் வாழும் பெரியக்காள்" என சிலா சாசனம் பண்ணுவித்தார்கள்.

* * * *

மனைவி செத்த பனிரெண்டு மாதங்களுக்குள் ஸாமுராயின் உற்றார் உறவினர்கள் அவனை மறுபடியும் கலியாணம் பண்ணிக் கொள்ளும்படி நிர்ப்பந்தப் படுத்தினார்கள். "உனக்கு என்ன வயதாகிவிட்டதா; கலியாணம் செய்து கொள்வது ஸாமுராய் கடமை அல்லவா, குழந்தை குட்டி இல்லாமல் நீ மாண்டு போனால் பித்ருக்களை வழி படுவதற்கு யார் இருக்கிறார்கள்?" என்று சொல்லி நெருக்கினார்கள்.

இடை விடாது புத்திசொல்லி அவனைக் கலியாணம் செய்துகொள்ள வைத்தார்கள். பெண்ணுக்கு வயது பதினேழுதான். மூங்கையாக நின்று இடித்துக்காட்டும் கல்லறை தோட்டத்தில் நின்றும், அவளையும் ஆசையோடு நடத்த முடியும் என்று கண்டான்.

## (2)

கலியாணமாகி ஏழு நாட்கள்வரை புதுப்பெண்ணின் குதுகலத்தைப் பாழ்படுத்த எதுவும் நிகழவில்லை. ஏழாவது நாளன்று, கணவனுக்கு இராத்திரி நேரத்தில் அரமனைக்காவல் செய்யவேண்டி ஏற்பட்டது.

அன்று மாலையிலேயே, ஏதோ காரணமற்றபயம் அவள் மனசைக் கவ்வியது. தூங்கலாம்என்று படுத்த போது தூக்கம் வரவில்லை. புயலுக்கு முந்திய புழுக்கம் மாதிரி உள்ள ஒரு சூழ்நிலை அவளை அமுக்கியது.

நடுநிசி. ரிஷபநேரம். வெளியிலே இருட்டில் ஒரு மணிச் சத்தம் கேட்டது. இந்த அர்த்தராத்திரியிலே யார் ஸாமுராய் வீதி வழியாகப் போகக்கூடும் என்று அதிசயப்பட்டாள். சற்றுநேரம் கழித்து மணிச் சத்தம் அருகில் கேட்டது. ஒரு வேளை அந்தயாத்திரி கன் வீட்டுக்குத்தான் வருகிறுனே. ஆனுல் ஏன் அவன் புறவாசல் வழியாக வரவேண்டும்? அங்கே பாதையே கிடையாதே.........திடீரென்று நாய்கள் அழுது ஓலமிட்டன. என்ன பயங்கரமாக பிலாக் கணம் தொடுக்கின்றன. பேய்க்கனவுபோல பயம் அவளது மனசைக் கவ்வியது.........ஆமாம் மணிச் சத்தம் தோட்டத்தில் தான் கேட்கிறது.........எழுந் திருந்து சென்று வேலைக்காரனை எழுப்ப விரும்பினுள். எழுந்திருக்க முடியவில்லை......குரல்கொடுக்க முடிய வில்லை......வாயிலிருந்து சத்தம் எழமாட்டேன் என் கிறது. ஆனுல் மணிச்சத்தமோ வீட்டை நெருங்கிக் கொண்டே இருந்தது. நாய்கள் என்னமாக அலறு கின்றன. வீட்டுக்குள்ளே ஏதோ நிழல் நுழைந்த மாதிரி ஒருத்தி வந்தாள். கதவும் தட்டியும் தாளிட்டு இறுகித்தான் மூடிக்கிடந்தன. பிணவுடை தரித்து கையிலே ஒரு மணியேந்தி ஒருத்தி நுழைந்தாள். அவளுக்குக் கண் இல்லை. வெறும் குழிதான் இருள் தேக்கியது. அவள் செத்து நெடுங்காலமாயிற்று. அவிழ்ந்துகிடந்த கூந்தல் முகத்தில் விழுந்து தொங்

கியது. கண்ணில்லா முகத்தாள், மயிர்ச்செறிவூடே நாக்கு இல்லாமல் பேசினுள்.

"இந்த வீட்டிலே நீ இருக்கக்கூடாது. இதற்கு நான் தான் எஜமானி. நீ போய்த்தாளுகவேண்டும். ஏன் போகிருய் என்று நீயாரிடமும் சொல்லக்கூடாது. நீ அவரிடம் சொன்னுல் உன்னைச் சுக்கு நூருகப் பிய்த்து விடுவேன்."

இப்படிச் சொல்லிவிட்டு அவள் மறைந்துவிட்டாள். புதுப்பெண் பயத்தினுல் பிரக்ஞையிழந்தாள். விடியும்வரை அப்படியே கிடந்தாள்.

பட்டப்பகலில், நேற்று ராத்திரி கண்டதும் கேட்டதும் நிஜமா பிரமையா என்று அவளுக்கே சந்தேகம் வந்துவிட்டது. எச்சரிக்கை அவள் நெஞ்சை அழுத்தியது. அதனுல் புருஷனிடமோ வேறுயாரிடமுமோ தான் கண்டதை சொல்ல அவள் துணியவில்லை. வெறும் துச்சொப்பனம், அதுதான் உடம்புக்குப் பண்ணியது எனத் தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

ஆனுல் மறுநாள் இரவு, சந்தேகத்துக்கு இடமற்றுப் போய்விட்டது. ரிஷப நேரம் வந்ததும் மறுபடியும் நாய்கள் அழுகுரல் தொடுத்தன. மறுபடியும் மணிச்சத்தம்கேட்டது. தோட்டத்திலிருந்து வீட்டை நெருங்கியது. மணியோசை கேட்டதும் அவள் எழுந்திருக்க எவ்வளவோ முயன்ருள். மறுபடியும் நேற்று வந்த அவள் வந்தாள்.

"நீ போய்விடவேண்டும். ஏன் போகிருய் என்று நீ யாரிடமும் சொல்லக்கூடாது. நீ அவரிடம் ரகசிய

மாகச் சொன்னாலும் உன்னை நான் கிழித்தெறிந்து விடுவேன்!"

இந்தத் தடவை அவள் படுக்கைக்கு கிட்டவே வந்து விட்டாள். குனிந்து முணு முணுத்தாள். கைகளை ஆட்டி ஆட்டிப் பேசினாள்.

மறுநாள் காலை ஸாமுராய் அரண்மனையிலிருந்து வந்ததும் மனைவி அவனைத் தெண்டனிட்டு வணங்கி "எனது நன்றிகெட்ட நடவடிக்கைக்காகவும், வாக்குத் துடுக்குக்காகவும் தாங்கள் மன்னிக்கவேண்டும். நான் என் வீட்டுக்குப் போகவேண்டும். உடனே நான் போய்விட வேண்டும்" என்றாள்.

"உனக்கு இங்கே என்ன குறை?" என்று அவன் ஆச்சரியப்பட்டுக் கேட்டான். "நான் இல்லாதபோது, யாராவது உன்னைத் துன்பப் படுத்தினார்களா?" என்றான்.

"அப்படியொன்றுமில்லை" என்று அவள் விம்மி விம்மி அழுதாள். "எல்லோரும் என்னை அன்பாகத் தான் நடத்துகிறார்கள்; ஆனால் நான் தங்களுக்கு பெண்டாட்டியாக இருக்கமுடியாது. நான் போக வேண்டும்" என்றாள்.

"அடி என் பெண்ணே, இந்த வீட்டில் உனக்கு வேதனையாக இருக்கிறது என்று கேட்க வருத்தமாக இருக்கிறது. யாரும் குறைவாக நடத்தாவிட்டால் நீ போக வேண்டிய காரணம் என்ன? நீ விவாகத்தை ரத்துப் பண்ணிக் கொள்ளத்தான் விரும்புகிறாயோ?"

"என்னை நீங்கள் விலக்கிவிடா விட்டால் நான் செத்துப் போவேன்" என்று அவள் நடுங்கியழுதாள்.

அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். இந்த விபரீத நடத்தைக்குக் காரணம் என்னவென்று யோசித்து யோசித்துப் பார்த்தான். கடைசியாக மனசில் உள்ளதைக் காட்டிக் கொள்ளாதபடி பின் வருமாறு பதில் சொன்னான்.

"உன்மேல் குற்றமில்லாதபோது உன்னை உன் ஜனங்களிடம் அனுப்பிவிடுவது மகா கேவலமான காரியம். காரணத்தைச் சொல்லு; கௌரவமாக விவகாரத்தை நான் விளக்குவதற்கு ஒரு வழி சொல்லு; உனக்கு விவாகரத்துப் பத்திரம் எழுதித் தந்துவிடுகிறேன். சரியான காரணத்தைச் சொல்லாமல் நான் உன்னை அனுப்பி விடமாட்டேன். குடும்பத்தின் கௌரவத்துக்கு ஹானி வரக்கூடாது" என்றான்.

வேறு வழி இல்லாமல் நடந்ததைச் சொல்ல வேண்டியதாயிற்று. எல்லாவற்றையும் சொன்னாள்: கடைசியாக "நான் தங்களிடம் சொல்லிவிட்டேனே இனிமேல் அவள் என்னை நிச்சயமாக கொன்றே போடுவாள்" என்று அழுதாள்.

ஸாமுராய் தீரன்: பேய் பிசாசுகளை நம்புகிறவனல்ல; இருந்தாலும் அந்த க்ஷணத்தில் அவன் திடுக்கிட்டுப் போனான். ஆனால் பயத்துக்குச் சாதாரண காரணங்களை எடுத்துக்காட்டினான். அதை தீர்ப்பதற்கு மனதிற்குள் ஒரு யோஜனை தட்டியது.

"நீ அதிகமாக பயந்து விட்டிருக்கிறாய். யாரோ உன்னிடம் ஏதோ அசட்டுக் கதைகளை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இந்த வீட்டில் நீ பேய்க் கனவு கண்டாய் என்பதற்காக நான் உன்னைத் தள்ளி வைத்துவிட முடியுமா? நானில்லாத

போது நீ இந்தமாதிரி வேதனைப் பட்டுக் கொண்டி ருந்தாய் என்பது தெரிய கஷ்டமாக இருக்கிறது. இன்றிரவும் நான் அரண்மனைக்குப் போகவேண்டும். ஆனால் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போகமாட் டேன். என்னுடைய பணியாட்கள் இருவரை உன் அறையிலேயே தூங்காமலிருந்து காவல் செய்யச் சொல்லுகிறேன். நீ நிம்மதியாக தூங்கலாம். அவர்கள் யோக்கியர்கள்; தீரர்கள்" என்றான்.

இணக்கமாகப் பேசி அவளுடைய பயத்தைத் தெளிவித்தான். அவளும் வீட்டில் இருக்கச் சம்மதித் தாள். தன் பயத்தை நினைக்க தனக்கே வெட்கமாக இருந்தது அவளுக்கு.

(3)

இளமனைவியைப் பாதுகாக்க நிறுத்திச் சென்ற காவலாளிகள் தீரர்கள்; பெண்களையும் சிசுக்களையும் பாதுகாப்பதில் அனுபவம் உள்ளவர்கள். அவளது மனசை உல்லாசப்படுத்த வேடிக்கையான கதைகளைச் சொன்னார்கள். அவள் பயத்தை மறந்துவிட்டாள். தூங்குவதற்குப் படுத்துக்கொண்டாள். காவலாளிகள் இருவரும் அதே அறையில் ஒரு தட்டிக்குப் பின்னால் உட்கார்ந்து தூங்காமல் இரவைக் கழிப்பதற்காக தாய மாடினார்கள். தூங்குகிறவள் விழித்துக் கொள்ளாம லிருக்க மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். அவ ளும் தொட்டில் குழந்தை மாதிரி தூங்கினாள்.

மறுபடியும் ரிஷபநேரம் வந்தது. பயந்து அல றிக்கொண்டு எழுந்தாள். ஏனென்றால் அவளது காத ருகில் மணியோசை கேட்டது......அது நெருங்கிவிட் டது. இன்னும் நெருங்குகிறது.......எழுந்து கூக்குர

விட்டாள்......ஆனால் அந்த அறையில் கூச்சலே இல்லை......மரணத்தின் மௌனம் நிலவியது......... மௌனம் வளர்ந்தது.........மௌனம் கனத்தது .........காவலாளிகளிடம் ஓடினாள்.........தாயக் கட்டத்தின்முன் அவர்கள் விரைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவரையொருவர் நிலை குத்திய கண்ணுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். கூச்சலிட்டாள்......அவர்களை உலுப்பினாள். அவர்கள் விரைத்துப் போயிருந்தார்கள்.........

பிறகு அவர்களிருவரும், மணியோசையைத் தாமும் கேட்டதாகவும், அவளது கூச்சல் காதில் விழுந்தது என்றும், அவள் தொட்ட ஸ்பரிசம்கூட தெரிந்தது என்றும் ஆனால் தங்களுக்கு எழவோ பேசவோ முடியவில்லை என்றும் சொன்னார்கள். அதன்பிறகு காதும் கண்ணும் செயலற்றுப் போயிருந்தும்; கடுந் தூக்கம் கவ்வியதாம்.

* * * *

உதய நேரத்தில் படுக்கையறைக்குள் புகுந்த ஸாமுராய் மங்கி மடியும் தீபவொளியில் மனைவியின் தலையற்ற முண்டத்தைக் கண்டான். அது ரத்த வெள்ளத்தில் இருந்தது. முடியாத விளையாட்டு பாதியில் நிறுத்தப்பட்டு காவலாளிகள் உட்கார்ந்தபடி தூங்கினார்கள். எஜமானனுடைய கூக்குரல் கேட்க துள்ளி எழுந்தார்கள். தரையில் கிடந்த கோரத்தைக் கண்டு மருண்டார்கள்......

தலையை எங்கும் காணவில்லை. உடற்குறை, தலை துண்டிக்கப் படவில்லை, திருகி பிய்த்து அகற்றப்பட்டது என்பதைக் காட்டியது. ரத்தம் சொட்டு

சொட்டாக வெளிக்கூடத்துக்குச் சென்றது. புயல்க் கதவுகளை யாரோ பிய்த்து அகற்றி இருக்கிறார்கள். புல்த்தரையில் ரத்தக் கசிவைத்தொடர்த்து சென்றார்கள் மூவரும்; மணல் வழியாகச் சென்றது. அல்லிக்குளத்து ஓரமாகச் சென்றது. மூங்கில்செறிவடியில் சென்றது. திடீரென்று வெளவால் மாதிரிக் கிரீச்சிடும் பேயுருவம் ஒன்றைக் கண்டார்கள். நெடுங்காலத்துக்குமுன் புதையுண்ட அவளுடைய உருவம். கல்லறைக்கு அருகே நின்றது. ஒருகையில் மணியும் மறுகையில் ரத்தம் சொட்டும் தலையுமிருந்தது. காவலாட்களில் ஒருவன் புத்த நாமத்தைச் சொல்லிக்கொண்டு கத்தியை வீசினான். உடனே அது பொலபொல வென்று உதிர்ந்து விழுந்தது. சவத்துணியும் எலும்புமாயிருந்தாள். சிதறின மணியும் ஓசையுடன் கீழே விழுந்து உருண்டது. ஆனால் தசையற்ற வலது கை மணிக்கட்டிலிருந்து இற்று விழுந்தாலும் துடித்தது; ரத்தம் சொட்டும் தலையை எலும்பு விரல்கள் விடவில்லை, விழுந்த பாகங்களை பழுப்பு நண்டு கவ்விய மாதிரி...........

"இது கொடுமையான கதை, செத்தவர்கள் இருப்பவர்கள் மீது வஞ்சம் தீர்ப்பது சரியானால், இதில் ஆண் மகன்தானே ஜவாப்தாரி" என்று கதை சொல்லியவரிடம் சொன்னேன்.

"ஆண்கள் இப்படி நினைக்கிறார்கள்; ஆனால் பெண்களின் மனசு வேறு விதம்" என்றார் அவர்.

அவர் சொன்னது வாஸ்தவம்.

[இது இஜூமோ கதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. ஸாமுராய் என்பவர்கள் ஜப்பானில் க்ஷத்திரியர்கள் மாதிரி.

நடு நிசிக்கு ஜப்பானியர் ரிஷப நேரம் என்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியாது.]

## எமனை ஏமாற்ற....................

மொங்காக்கு ஷோனின் என்ற மகானான புத்த பிக்ஷு தான் எழுதியுள்ள கியோ-ஜியோ-ஷின்-ஷோ என்ற கிரந்தத்தில் பின்வருமாறு எழுதுகிறார்: "ஜனங்கள் வழிபடும் தெய்வங்களில் பல துர்தேவதைகளாகும். அவலோகிதன், தர்மம், பிக்ஷுக்கள் என்ற முத்திறங்களையும் மதித்து வழிபடுவோர் இந்தத் துர் தேவதைகளை வணங்க மாட்டார்கள். இந்தத் தேவதைகளிடமிருந்து இஷ்டசித்தி பெறுகிறவர்கள் முடிவில் தாம் பெற்ற வரத்தினாலேயே துன்பப் படுவார்கள்." நிபான்-ரீயி-இக்கி என்ற கிரந்தத்தில் உள்ள கதை இதற்குத் தகுந்த சான்று.

ஷோசி மகாராஜா ஆட்சியின் போது ஸானுகி பிராந்தியத்தில் யமாத கோரி என்ற ஊரில் புஷுகி நோஷின் என்று ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒத்தைக் கொரு குழந்தை தான் உண்டு. அது பெண்; அதன் பெயர் கினுமி. கினுமி நல்ல அழகி; வனப்பும் உருவும் ஒருங்கே அமைந்திருந்தன. அவளுக்கு வயது பதினெட்டான போது தேசத்தில் ஒரு கொடிய தொற்று நோய் கண்டது. அவளும் அந்த நோய்க்கு ஆளானாள். அவளுடைய பெற்றோரும் உறவினரும் ஒரு துர்தேவதையைவணங்கி அவள் உயிரைக் காப்பாற்றும்படி வரங் கிடந்தார்கள்.

பல நாட்களாக மயங்கிக்கிடந்த பெண் தெளிந்து ஒரு நாள் மாலைதான் கண்ட கனவைச் சொன்னாள். அந்த துர்தேவதை தன் முன் தோன்றி பின் வருமாறு சொல்லியதாம். "உன்னுடைய பெற்றோர்கள் உருக்கமாக என்னை வழிபட்டதினால் உன்னைக் காப்பாற்ற விரும்புகிறேன். வேறு ஒருவருடைய உயிரை உனக்குக் கொடுக்காமல் உன்னை என்னால் காப்பாற்ற முடியாது. உன் பெயருள்ள பெண் யாரும் உனக்கு ஞாபகம் வருகிறதா?" என்று இந்த தெய்வம் கேட்டது. "உத்தரிகோரியில் என் பெயர் கொண்ட ஒரு பெண் இருக்கிறாள் என்று எனக்கு தெரியும்" என்று கினூமி சொன்னாள். "அவளை எனக்குக்காட்டு" என தேவதை என்னைத் தொட்டது. அதன் ஸ்பரிசம் பட்டதும் நானும் உடன் எழுந்தேன். மறு க்ஷணத்தில் உத்தரி கோரி கினூமி வீட்டில் நின்றோம். "அதோ அந்தப் பெண்தான்" என்று யமாதகோரி கினூமி சொன்னாள். தேவதை சிகப்புப் பையிலிருந்து உறிமாதிரி ஏதோ ஒரு இரும்பு ஆயுதத்தை எடுத்தது. உத்தரி கோரி கினூமியின் வீட்டுக்குள் புகுந்து அவள் நெற்றியில் அதைச் சொருகியது. அலறிக்கொண்டு உத்தரிகோரி கினூமி தரையில் சாய்ந்தாள். யமாத கோரி கினூமி விழித்து இந்தக் கனவை தனது பெற்றோரிடம் சொன்னாள்.

இதைச் சொன்ன பிற்பாடு அவள் மறுபடியும் மயங்கி விட்டாள். மூன்று தினங்கள் உலகப் பிரக்ஞையே இல்லாமல் கிடந்தாள். உயிர் போய்விடுமோ என்று பெற்றோர் தவித்தனர். ஆனால் மறுபடியும் அவள் கண்ணை விழித்தாள். உடனே பாயிலிருந்து

எழுந்தாள். சுற்று முற்றும் வெறித்துப் பார்த்து விட்டு, "இது என் வீடில்லையே, இது என் பெற்ருேரில்லையே" என்று கத்திக்கொண்டு வெளியே ஓடிஞள்.................

விபரீதமாக ஏதோ நிகழ்ந்து விட்டது.

உத்தரிகோரி கிஞமி, துர்தேவதையிடம் குத்துப் பட்டு மாண்டு போஞள். அவளுடைய பெற்ருேர் கள் ரொம்பவும் வருந்திஞர்கள். பௌத்த மடாலய பிஷுக்கள் அவளுக்கு பிரார்த்தனை நடத்திஞர்கள். கிராமத்துக்கு வெளியே அவளது சடலத்தை எடுத் துச் சென்று எரித்து விட்டார்கள். பிறகு அவளது ஆவி மீய்டோவுக்குச் சென்றது. அதை எம் மாதாவோ என்ற எமதர்மராஜன் சன்னிதியில் கொண்டுபோய் நிறுத்திஞர்கள். எமன் அவளை ஏறிட்டுப் பார்த்தவுடன் இது உத்தரிகோரி கிஞமி அல்லவா. அவளை ஏன் இவ்வளவு சீக்கிரத்தில் அழைத்து வந்தீர்கள். ஷாபா லோகத்துக்கு (மானுட உலகத்துக்கு) அவளை உடனே அனுப்பிவிட்டு, யமாத கோரி கிஞமியின் உயிரைக்கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான். உத்தரிகோரி கிஞமி எம தர்மன் காலில் விழுந்து, "தர்மராஜா நான் மாண்டு மூன்று நாட்கள் கழிந்து விட்டதே: என்னுடைய உடம்பை எரித்து விட்டிருப்பார்களே. என்னை ஷாபா உலகத்துக்கு அனுப்பிஞல் நான் என்ன செய் வேன். என் உடம்பு சாம்பலாகி விட்டதே. எனக்கு இனி உடம்பேது?" என்று அழுதாள்.

எம தர்மன் சொன்ஞன்: "பெண்ணே கவலைப் படாதே. யமாதகோரி கிஞமியின் உடம்பை உனக்குக்

கொடுக்கிறேன். அவள் உயிரைத்தான் இங்கு கொண்டு வரவேண்டும். உடம்பு எரிந்து போய் விட்டதே என்று கவலைப்படாதே. யமாதகோரியின் உடம்பும் உனக்குப் பிடித்திருக்கும்" என்முன். அவன் பேசி முடியுமுன் யமாதகோரி கினுமியின் உடம்பில் உத்தரிகோரியின் ஆவி புகுந்தது.

நோயுற்ற பெண் எழுந்து ஓடுவதைக் கண்ட யமாதகோரி பெற்ருேர்கள், முதலில் அவளுக்கு புத்தி கலங்கி விட்டது என்று நினைத்தார்கள். "எங்கே ஓடுகிருய், ஓடாதே, ஓடாதே" என்று தொடர்ந்தார்கள். சிறுமியோ நிற்காமல் நிலைக்காமல் உத்தரிகோரியில் உள்ள மாண்டு போன கினுமியின் வீட்டுக்கு ஓடி வந்தாள். பெற்ருேர்களைக் கண்டதும் வணங்கி, "மறுபடியும் வீட்டுக்குள் நுழைவது என்ருல் எவ்வளவு சுகமாக இருக்கிறது; நீங்கள் சுகமா" என்று கேட்டாள். பெற்ருேருக்கு அவளை அடையாளம் தெரியவில்லை. அவளுக்குப் பைத்தியமோ என்று நினைத்தார்கள். "நீ எங்கே இருந்து வருகிருய் பெண்ணே" என்று தாயார் உருக்கமாகக் கேட்டாள். நான் மீய்டோவிலிருந்து வருகிறேன். நான் உங்களுடைய குழந்தைதான்; ஆனுல் உடம்புதான் வேறு" என்ருள் கினுமி. பிறகு நடந்ததை எல்லாம் பெற்ருேருக்குச் சொன்னுள். முதியவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். நம்புவதா கூடாதா என்று தயங்கினுர்கள். அந்தச் சமயத்தில் யமாதகோரி பெற்ருேர்கள் குழந்தையைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தார்கள். இரண்டு குடும்பமும் பரஸ்பரம் கலந்து பேசி, பெண்ணை நன்ருக விசாரித்துப் பார்த்தார்கள். வார்த்தைகளை நம்பத்தான் வேண்டி இருந்தது. யமாத

கோரி கினுமியின் தாயார் தன் மகள் கண்ட கனவை விவரித்துவிட்டு, “பெண்ணின் உயிர் உங்கள் மகளின் உயிர் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் உடம்பு எங்கள் குழந்தையின் உடம்பு என்பதை நீங்கள் நினைவில் வைக்கவேண்டும். ஆகையால் இந்த இரண்டு குடும்பங்களுக்கும் இந்தக் குழந்தையில் பங்கு உண்டு. இனிமேல் இந்த இரண்டு குடும்பத்தின் குழந்தையாக நாம் இவளை மதிக்கவேண்டும்” என்றாள். உத்தரி கோரி பெற்றோர்கள் இதற்கு இணங்கினார்கள். கினுமிக்கு இவ்விரண்டு குடும்பங்களின் சொத்தும் கிடைத்தது என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

[புக்யோ-ஹ்யாக்வா-ஜென்ஷோ என்ற கிரந்தத்தை எழுதிய ஜப்பானியர், “நிபான்-ரீயீ-இக்கி என்ற புஸ்தகத்தில் முதல் பாகத்தில் பனிரெண்டாவது கடுதாசியில் இடது பக்கத்தில் இருக்கிறது” என்று எழுதுகிறார்.

எம்மோதாவோ என்ற வார்த்தையை எமதர்மன் என்று பெயர்த்திருக்கிறேன். ஷாபா உலகம்-சஹலோகம்.]

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

# அஷ்டமாசித்தி

டென்ஷோ வம்சத்தின் ஆதிக்கத்தின்போது, கியொட்டோ என்ற வடக்குப்பிராந்தியத்தில் குவான் ஷின் கோஜி என்ற வயோதிகன் வாழ்ந்து வந்தான். நீண்டு நெஞ்சை மறைக்கும் வெள்ளைத் தாடியுடன், ஷின்டோ குருக்கள்மார் போல உடையணிந்து பௌத்த சித்திரங்களைக் காட்டியும் தர்மத்தை ஜனங் களிடை உபதேசித்தும் பிழைத்து வந்தான். தினம் தினம் அவன் கியோன் ஆலயத்தின் பிராகாரத்தில் உள்ள பெரிய மரத்தில் ஒரு பெரிய படச்சீலையைத் தொங்கவிடுவான். அதிலே யமலோக சிட்சைகள் தண்டனைகள் எல்லாம் தீட்டப்பட்டிருந்தன. எத்தனை நரகங்கள்; எத்தனைவித வாதனைகள். படத்தைப் பார்த்தால் நிஜம்போலத் தோன்றும். அதைப் பார்க் கக்கூடும் ஜனத் திரளுக்கு இந்தக் கிழவன் தன்கையி லுள்ள நியோயி தண்டைநீட்டி படத்துச் சிட்சைகள் ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டி காரண காரிய நியதியையும் விளக்குவான். பிறகுபுத்த பகவான்உப தேசங்களைக் கடைப் பிடிக்கும்படி வற்புறுத்துவான், படத்தைப் பார்க்கவும் அவனது பேச்சைக் கேட்கவும் ஜனங்கள் ஏராளமாகக் கூடுவார்கள், சில சமயங்களில் கிழவன் தனக்கு முன்னால் பிச்சைக்காக ஒரு பாயை விரித்திருப்பான்; அதில் வந்து விழுகிற காசு பாயையே மறைத்துவிடும்.

அந்தக் காலத்தில் ஓட்டா நோபு நாகன் என்பவன் கியோட்டோவையும் அடுத்துள்ள பிராந்தியங்களையும் ஆண்டு வந்தான். அவனுடைய பரிவாரத்தில் ஆரகாவா என்று ஒருவன் உண்டு. அவன் ஒரு நாள் கியோன் ஆலயத்துக்கு வந்தபோது படத்தைப் பார்த்தான். பிறகு ராஜ சன்னிதானத்திலே அதைப்பற்றி விஸ்தரித்தான். ஆரகாவனுடைய பேச்சை நோபு நாகன் சுவாரசியமாகக் கேட்டான். உடனே படத்தை எடுத்துக் கொண்டு அரமனைக்கு வரவேண்டும் என்று குவான்ஷின் கோஜிக்கு உத்தரவிட்டான்.

சித்திரச் சீலையைப் பார்த்தவுடன் நோபு நாகன் ஆச்சரியத்தால் பிரமித்துப் போனான். படம் நிஜம் போல கண்ணுக்கு முன்னால் நின்றது. யமகிங்கரர்களும் தண்டனை யனுபவித்து தவிக்கும் ஜீவன்களும் தனக்கு முன்னால் நடமாடுவதுபோல தெரிந்தது. ஜீவன்கள் வாதனை பொறுக்கமுடியாமல் ஓலமிடுவதும் கேட்டது. படத்தில் தீட்டியிருந்த ரத்தம் பிரவாக மெடுப்பது போலவே தோன்றியது. தன்னையறியாமலே படத்தில் ஈரக்கசிவு இருக்கிறதோ எனபடத்தை விரல் கொண்டு தொட்டுப் பார்த்தான். படச் சீலை காய்ந்துதான் கிடந்தது. ஆச்சரியம் மேலிட்டவனாய், நோபுநாகன், "இந்தப் படத்தை எழுதியவன் யார்?" என்று கேட்டான். புகழ்பெற்ற ஓகூரி ஸோட்டான் என்ற சித்திரக்காரன் இந்தப் படத்தைத் தீட்டினான் என்று குவான்ஷின் கோஜி அறிவித்தான். நூறு தினங்கள் தவமிருந்த பிற்பாடு கியோமிட்ஸீ ஆலயத்து குவானன் என்ற தெய்வத்தை வணங்கியபின் சித்திரக்காரன் இந்தப்படத்தை வரைந்தானாம்.

நோபு நாகனுக்குப் படத்தில் நாட்டமிருப்பது கண்டு ஆரகாவன், மன்னனுக்கு காணிக்கையாக படத்தைக் கொடுத்துவிட சம்மதமா என்று குவான் ஷின்கோஜியைக் கேட்டான். கிழவன் அதற்குப் பதில் சொன்னன்: "இந்தப் படம் ஒன்றுதான் நான் மதிக்கும் சொத்தாக என்னிடம் இருந்து வருகிறது. அதை ஜனங்களிடம் காட்டி வயிறு பிழைக்கிறேன். இதைநான் மன்னனுக்கு காணிக்கையாக செலுத்தி விட்டால், வேறு எனக்கு பிழைப்புக்கு வழி ஏது? மகாராஜாவுக்குப் படத்திலே ரொம்பவும் ஆசை என்றல் நூறு பொற்காசுகள் எனக்குக் கொடுக்கட்டும். அந்தப் பணத்தைக்கொண்டு நான் ஜீவனம் செய்துகொள்வேன். இல்லாவிட்டால் படத்தைக் கொடுக்கமுடியாது."

நோபுநாகனுக்கு இந்தபேரம் பிடிக்கவில்லை. மவுனமாக இருந்துவிட்டான். ஆரகாவன் ரகசிய மாக இவன் காதில் எதுவோ ஓதினன். அவனும் சம்மதித்துத் தலையை அசைத்தான். குவான்ஷின் கோஜிக்கு ஏதோ சொற்பத்தொகை பரிசில்வழங்கி அவனை அனுப்பிவிட்டார்கள்.

கிழவன் மாளிகையைவிட்டு வெளியேறியதும் ஆரகாவனும் ரகசியமாக அவனைத்தொடர்ந்தான். படத்தை எப்படியாவது மோசடியாக கிழவனிட மிருந்து பறித்துவிடவேண்டும் என்பது அவன் நினைப்பு. சவுகரியமும் கிடைத்தது. நகரத்துக்கு வெளியே உள்ள மலையை நோக்கிச் செல்லும் பாதையை மேற்கொண்டான் குவான்ஷின் கோஜி. மலையடிவாரத்திலே பாதை திடீரென்று திரும்பும்

தன்னந்தனிமையான இடத்தில் ஆரகாவனிடம் அவன் அகப்பட்டுக் கொண்டான். "படத்துக்கு நூறு பொன் கேட்க பேராரை பிடித்து ஆட்டு கிறதோ? அதற்குப் பதிலாக மூன்றுமுழ இரும்புத் துண்டு உனக்கு பரிசாக கிடைக்கிறது பார்" என்று மிரட்டி வாளையுருவி கிழவனைக் குத்திவிட்டுபடத்தை எடுத்துக் கொண்டு திரும்பினான்.

மறுநாள் சித்திரச் சீலையை நோபுநாகன் பாதத் தில்சமர்ப்பித்தான். குவான்ஷின் கோஜி முந்தியதினம் கடைசியாக அரசசன்னிதானத்தில் எப்படி படச் சீலையைச் சுருட்டி கட்டியிருந்தானோ அப்படியே இருந்தது. உடனே படத்தைத் தொங்கப் போடும்படி நோபுநாகன் உத்தரவிட்டான். படச்சீலையை விரித் துத் தொங்கப்போட்ட பொழுது மன்னனும் ஆரகா வனும் அதிசயித்துப் போனார்கள். வெறும் சீலை மட்டுந்தான் தொங்கியது. அதில் படத்தைக் காண வில்லை. எப்படிப்படம் மறைந்தது என்பதைவிளக்க முடியாமல் தவித்தான் ஆரகாவன். தெரிந்தோ தெரியாமலோ ஏஜமானனை ஏமாற்றிய குற்றத்துக் காக சிறைத் தண்டனை பெற்றான்.

தண்டனைகாலம் முடிவடைந்து வெளிவந்த க்ஷணத திலேயே, குவான்ஷின்கோஜி, கிட்டானோ ஆலயத்தில் படத்தைக் காட்டிக்கொண்டு பிழைப்பதாக கேள்விப் பட்டான். கேட்டதை நம்பமுடியவில்லை. ஆனால் இந்தச் சேதி அவனது நெஞ்சில் அற்ப நம்பிக்கையை விதைத்தது. எப்படியாவது கிழவனைச் சந்தித்து சித்திரச்சீலையைப் பெற்று தனது குற்றத்துக்கு பரிகாரம் தேடிக் கொள்ள முடியும் என நம்பினான். உடனே தனது பணியாட்களைத் திரட்டிக் கொண்டு

கோயிலுக்குப் போனான். ஆனால் குவான்ஷின்கோஜி சென்றுவிட்டான் என்ற தகவல் தான் கிடைத்தது.

சில நாட்கள் கழித்து கியோமிட்ஸீ ஆலயத்தில் கிழவன் படங்காட்டிக் கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தது. ஆரகாவன் கோயிலுக்கு ஓடினான்; கூட்டம் கலைவதைத்தான் கண்டான்; கிழவனைக் காணவில்லை.

கடைசியாக ஆரகாவன், கிழவனை திடீரென்று ஒரு மதுக்கடையில் கண்டு பிடித்துக்கொண்டான். தன்னைப் பிடித்துக் கட்டுவதைபார்த்து சிரித்துக் கொண்டே "கூப்பிட்டால் உம்முடன் வருவேனே; ஆனால் அவசரப்படவேண்டாம், சற்று மது அருந்தி விட்டு வருகிறேன்" என்று குவான்ஷின்கோஜி சொன்னான். ஆரகாவன் அதனை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள் அதிசயிக்கும்படியாக பனிரெண்டு மதுக்குடங்களை தீர்த்து உருட்டி விட்டான் கிழவன். பனிரெண்டாவது குடம் உருண்டது; தாகவிடாய் தீர்ந்தது என்றான் கிழவன். அவனைக் கட்டி நோபுநாகன் மாளிகைக்கு இழுத்துச் செல்லும்படி உத்தரவு போட்டான் ஆரகாவன்.

குவான்ஷின்கோஜி மறுபடியும் ராஜ சபையிலே விசாரிக்கப்பட்டான். தலைமைஅதிகாரிகடுமையாக, "நீ ஜனங்களிடை மந்திரவித்தைகளைக் காட்டி ஏமாற்றி பிழைத்து வருவதாகத் தெரிகிறது. அதற்கு கடுந்தண்டனை கிடைப்பது நிச்சயம்; இருந்தாலும் மரியாதையுடன் எங்கள் மன்னர் நோபுநாகரிடம் படத்தைக் கொடுத்து விட்டால் அந்தப் பிழையை மன்னித்து விடுகிறோம்; இல்லாவிட்டால் நீ நினைத்

தும் அறியாத கடுந்தண்டனை கிடைப்பது நிச்சயம்'' என்றான்.

இதைக்கேட்டு மதிமருண்டவனைப்போல சிரித்து குவான்ஷின்கோஜி பின்வருமாறு சொல்லலானான்: "நான் ஜனங்களை ஏமாற்றவில்லை." என்றுகூறி ஆரகாவனைத் திரும்பிப் பார்த்து "நீ தான் ஏமாற்றுக்காரன்; படத்தை வாங்கி மன்னனைக் காக்கை பிடிக்க முயன்றாய்: அதைத் திருடுவதற்காக என்னைக் கொல்ல முயன்றாய்: குற்றம் என ஒன்று இருக்குமாகில் அது தான் குற்றம்; ஆனால் அதிருஷ்ட வசமாக என்னைக் கொல்ல முடியவில்லை. நீ அதில் ஜெயித்திருந்தால் - நீ ஆசைப்பட்டதுபோல் நடந்திருந்தால், அந்தச் செயலுக்காக என்ன சொல்லி பரிந்து பேசமுடியும் உனக்கு? எப்படியானாலும் நீ படத்தைத் திருடினாய். என் வசம் இருப்பது அதன் நகல்தான்; படத்தைத் திருடியபின் மனம் மாறியது. மன்னனுக்கு ஏன் கொடுக்கவேண்டும் நாமே வைத்துக்கொண்டால் என்ன என்று நினைத்து அதற்குத் தந்திரம் செய்தாய். வெறும் படமில்லாச் சீலையை மட்டும் மன்னனிடம் கொடுத்தாய்; கடைசியில் நான் ஏமாற்றி விட்டதாக பழியும் போடுகிறாய்; நிஜப்படம் எங்கிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது; ஒரு வேளை உனக்குத் தெரிந்திருக்கக்கூடும்'' என்றான்.

இதைக்கேட்ட ஆரகாவனுக்கு ஆக்ரோஷம் வந்தது. கைதியை நோக்கி ஓடினான். காவலர்கள் தடுத்திராவிட்டால் அவனை அடித்துப் போட்டிருப்பான். இவனது சினம் தலைமை அதிகாரிக்கு அவன் மீது சந்தேகத்தைத் தூண்டியது. குவான்ஷின் கோஜி

யைச் சிறைச்சாலைக்கு கொண்டுபோகும்படி உத்தரவு போட்டுவிட்டு ஆரகாவனை நெருக்கிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தான். ஆரகாவனுக்கு இயல்பாகவே தாராளமாகப் பேசத் தெரியாது. தயங்கித் தயங்கிப் பேசுவான். மனம் குழம்பிவிட்டதால் இப்போது பேசவே முடியவில்லை. முன்னுக்குப் பின் முரணாக உளறிக்கொட்டி சந்தேகத்தை வலுக்கவைத்துக் கொண்டான். அவன் உண்மையை கக்கும்வரை தடிகொண்டு நையப்புடைக்கும்படி பிரதம அதிகாரி உத்தரவிட்டான். ஆரகாவன் அடிவலி பொறுக்க முடியாமல் பிரக்ஞையை இழந்தான்.

சிறையில் கிடந்த குவான்ஷின்கோஜிக்கு ஆரகாவன் பட்ட அவஸ்தையை எல்லாம் சொன்னார்கள். கிழவன் சிரித்தான், சிரித்துவிட்டு சற்று சிந்தனை செய்தான்; சிறைக் காவலனிடம், "நான் சொல்லுவதைக் கவனமாக கேள். ஆரகாவன் வாஸ்தவத்தில் அயோக்கியன்தான்; அவனைத் திருத்துவதற்காகவே அவனுக்கு தண்டனை கிடைக்கும்படி செய்தேன். ஆரகாவனுக்கு உண்மை தெரியாது; என்னால் எல்லாவற்றையும் திருப்திகரமாக விளக்கமுடியும் என்று தலைமை அதிகாரியிடம் போய்ச் சொல்லு" என்றான்.

மீண்டும் கிழவனை தலைமை அதிகாரியிடம் அழைத்துவந்துநிறுத்தினார்கள். குவான்ஷின்கோஜி அதிகாரியிடம் பின்வருமாறு அறிவித்தான்:

"வாஸ்தவத்திலேயே சிறப்பான சித்திரங்களுக்கு உயிர் உண்டு. அதற்கு மனம், புத்தி, சித்தம் ஆகிய எல்லாம் உண்டு. அதற்கு உயிர் வழங்கியவனிடமிருந்தோ அல்லது அதனுடைய நியாயமான சொந்தக்காரனிடமிருந்தோ பிரிக்கப்படுவதற்கு

இணங்காது. சிறந்த படங்களுக்கு உயிர் உண்டு என்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் உண்டு. ஹோகன் என்ஷின் என்ற சித்திரக்காரன் புஸீமாத் தட்டியில் சிட்டுக் குருவிகளை வரைந்தான்; அவை உயிர்பெற்றுப் பறந்துவிட படத்தில் வரைந்த இடம் காலியாகி வெறிச்சோடிக் கிடந்தது. படச்சீலையில் வரைந்த குதிரை இரவில் புல்மேய்வதற்காகவெளியே போவதைக் கேட்டிருப்பதில்லையா. அதிருக்கட்டும்; இந்த வழக்கில் மன்னன் நோடுநாகனை எந்தவிதத்திலும் படத்துக்குச் சொந்தக்காரன் என்று சொல்ல முடியாது. நான் முதலில்கேட்ட விலையைக் கொடுத்தால் படம் மீண்டும் திரைச்சீலையில் தானுகவே தெரியும் என்று நினைக்கிறேன். வேண்டுமானுல் சோதித்துப் பாருங்களேன். இதில் நஷ்டமென்ன இருக்கிறது. படம் தெரியாவிட்டா பணத்தை உடனே திருப்பிக்கொடுக்கிறேன்" என்ருன்.

இந்த அதிசயமான வார்த்தைகளைக் கேட்ட நோடுநாகன், தொகையைக் கொடுக்கும்படி உத்தரவு போட்டுவிட்டு விளைவைக் காண தானே நேரில் வந்தான். அவன் முன்பு சித்திரச் சீலையை விரித்தார்கள். அங்குள்ளோர் யாவரும் அதிசயிக்கும்படி படம் முன்போல தென்பட்டது, ஆனுல் வண்ணக் கலவைகள் முன்போல பளிச்சென்று தெரியவில்லை. சற்று மங்கிப்போயிருந்தது. ஜீவன்களும் கிங்கரர்களும் முன்போல ஜீவகளையுடன் தென்படவில்லை. இதைக் கவனித்த மன்னன் "ஏன்?" என்று கேட்டான். குவான்ஷின் கோஜி அதற்குப் பின்வருமாறு பதில் சொன்னுன்:

"முதல் முதலில் படத்தை நீபார்க்கும்போது

அதற்குவிலை இல்லை, விலைமதிப்புக்குள் அடைபடாத சித்திரமாக இருந்தது. ஆனால் இப்பொழுது நீ பார்க்கும் படத்தின் மதிப்பு நீ கொடுத்த நூறு பொன்காசுகள்தான். அந்தத் தொகைக்கு ஈடான அழகுதான் இப்போது அதில் உமக்குத் தென்படுகிறது" என்றான். கிழவனை உடனே விடுதலை செய்தார்கள். ஆரகாவனையும் விடுவித்தார்கள். அவன் செய்த அக்கிரமத்திற்கு பட்டதே போதும்.

ஆரகாவனுக்கு பூயிச்சி என்று ஒரு தம்பியுண்டு. அண்ணனுக்கு அடியும் சிறையும் கிடைத்தது கண்டு மிக்ககோபம் கொண்டான். அந்தக் கொதிப்பிலே குவான்ஷின் கோஜியைக் கொன்றுவிடத் தீர்மானித்தான். கிழவன் விடுதலை கிடைத்ததும் நேராக மதுக்கடைக்குச் சென்றான். அவனைத் தொடர்ந்து கடைக்குள் சென்ற பூயிச்சி, அவனைக் கீழே தள்ளி தலையை வெட்டினான். கிழவனுக்கு கிடைத்த நூறு பொற்காசுகளையும் எடுத்துக்கொண்டான். தலையையும் தொகையையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு அண்ணனிடம் சென்று அவன் காலடியில் வைத்தான். மூட்டையை அவிழ்த்து விரித்தான். உள்ளே மதுக் குடுக்கையும் மலமும்தான் இருந்தது! கடையில் கிடந்த தலையில்லா முண்டமும் மறைந்து போயிற்று என்பதையும்கேட்டு இன்னும் அதிகமாக திக்பிரமை பிடித்துப் போனார்கள் சகோதரர்கள் இருவரும்.

பிறகு ஒரு மாத காலம்வரை குவான்ஷின் கோஜியைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. ஒரு மாதம் கழித்து ஒருநாள் நோபுநாகன் மாளிகை வாசலில் குவான்ஷின்கோஜியைப் போன்ற ஒருவன் குரட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்; குரட்டை இடி

யின் கர்ஜனைபோல் இருந்தது. மது மயக்கத்தில் கிடப்பவன் அவன்தான் என்று காவலன் ஒருவன் கண்டான். தூங்கிக் கிடந்தவனைத் தூக்கிப் போய் சிறையில் போட்டு அடைத்தான். அங்கும் கிழவன் விழிக்கவில்லை. பத்து நாட்கள் இரவு பகல் ஓயாமல் தூங்கினன். அவனது குரட்டை தூரத்துப் போர் முரசுபோல ஒலித்துக் கொண்டிருந்தது.

இச்சமயத்தில்தான் நோபுநாகன் தன்னுடைய படைத் தலைவர்களுள் ஒருவனை அக்கெச்சி மிட்ஸு ஹீடே என்பனுடைய சதிக்கத்திக்கு இலக்காகி மாண்டான். மிட்ஸு ஹீடே ஆதிக்கம் பனிரெண்டு நாட்கள்தான் நிலைத்தது.

மிட்ஸு ஹீடே, கியோட்டோவுக்கு மன்னனான வுடன், குவான்ஷின் கோஜியின் வழக்கை, அவனிடம் அறிவித்தார்கள். கைதியை தன் முன்னுல் அழைத்து வரும்படி உத்தரவிட்டான் மிட்ஸு ஹீடே. கிழவனைக்கொண்டு வந்து நிறுத்தினர்கள். மிட்ஸு ஹீடே அவனைப் பரிவுடன் நடத்தினன். அவனுக்கு திருப்தியாக நல்ல உணவு பரிமாறும்படி உத்தரவிட்டான். குவான்ஷின் கோஜி சாப்பிட்ட பிற்பாடு, "தங்களுக்கு மதுவில் அத்யந்தப்ரீதி என்று சொல்லுகிருர்கள்; ஒரே தடவையில் நீங்கள் எவ்வளவுதான் சாப்பிடுவீர்கள்" என்று கேட்டான் புது மன்னன்.

"எவ்வளவு குடிப்பேன் என்று தெரியாது. மதி மயங்கும் சமயத்தில் நிறுத்தி விடுவேன்" என்ருன் கிழவன்.

மதுக்குடத்தை குவான்ஷின் கோஜிமுன் கொண்டு வந்து வைக்கும்படி கட்டளையிட்டான் அரசன். கிழவனுடைய கலசம் வற்ற வற்ற ஊற்ற வேண்டும் என்று கட்டளையிட்டான். கிழவன் கிரமமாக பத்துக் குடங்களைக் காலி செய்து விட்டான். "இன்னும் இருக்கிறதா?" என்று கேட்பான். பணியாள் மதுக்குடங்கள் யாவும் காலி என்று சொல்ல கூடியிருந்தவர்கள் பிரமித்துப் போனார்கள்.

"இன்னும் உங்களுக்கு திருப்தி வரவில்லையா?" என்று கேட்டான் அரசன்.

"அரசே ஒருவாறு திருப்திதான்; உனது கருணைக்கு பதிலாக எனக்குத் தெரிந்த சில வேடிக்கைகளைக் காண்பிக்கிறேன்" என்றான் குவான்ஷின் கோஜி.

"அரசே அந்தத் திரையில் தெரியும் படத்தைச் சற்று கவனியுங்கள்" என்றான் குவான்ஷின் கோஜி.

ஓமித்தடாகத்தின் எட்டு அழகுகளைக் காட்டும் சித்திரம் அது. அங்குள்ளவர்கள் யாவரும் படத்தையே பார்த்தார்கள். படத்திலே ஒரு மனிதன் ஒரு படகை ஓட்டிச் செல்லுவது போல வரைந்திருந்தான் சித்திரக்காரன். படத்திலே படகு ஒரு அங்குல நீளந்தானிருந்தது. குவான்ஷின் கோஜி படகை நோக்கிக் கையை நீட்டி அழைத்தான். படகு படத்தில் திரும்பியது. முன்னேக்கிவர ஆரம்பித்தது. நெருங்க நெருங்க படகும் பெரிதாயிற்று. சிறிது நேரத்தில் பட கோட்டியின் முக ஜாடையும் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. படகும் ரொம்ப அருகில் நெருங்கி விட்டது. திடீரென்று படத்திலிருந்த ஏரித் தண்ணீர் படத்தை விட்டு வழிந்து அறைக்குள்

பெருக ஆரம்பித்தது. அறையில் கூடியிருந்தவர்கள் உடைகள் நனைந்து போகாமல் வரிந்து தூக்கிக் கொண்டனர். ஜலம் முழங்கால் அளவு வந்தது. மேலும் பெருக ஆரம்பித்தது. அதே சமயத்தில் படகும் திரையைவிட்டு வெளிவந்தது. நிஜமான செம்படவன் படகு. அதன் துடுப்பு வலிப்பதும் கேட்டது. தண்ணீர் மேலும் மேலும் பெருக ஆரம்பித்தது. அங்கு நின்றிருந்தவர்கள் இடுப்பளவு நனைந்தனர். படகு குவான்ஷின் கோஜியிடம் வந்தது. குவான்ஷின் கோஜி அதில் ஏறிக்கொண்டான். படகுக்காரன் படகைத் திருப்பி வெகு வேகமாக ஓட்டிச் சென்ருன். படகு செல்லச் செல்ல ஜலமும் வடிய ஆரம்பித்தது. படகும் ஜலமும் படத்துக்குள்ளாகவே வடிந்து மறைய ஆரம்பித்தன. படகு, படத்தின் முன்பக்கமிருந்து செல்ல ஆரம்பித்ததும் அறையில் ஒரு சொட்டு ஜலம்கூட இல்லை. முன்போல காய்ந்து ஈரக் கசிவுகூட இல்லாமல் போய்விட்டது. ஆனுல் படத்துக்குள் சென்ற படகும் வேகமாக சென்றுகொண்டே இருந்தது. அது தூரத்தில் செல்லச் செல்ல, சிறிதாகி வெறும் புள்ளிபோலாயிற்று. பிறகு அந்தப் புள்ளியும் மறைந்தது. குவான்ஷின் கோஜியும் அதோடு மறைந்துபோனுன். அதன்பிறகு அவன் ஜப்பானில் தென்படவே இல்லை.

[டென்ஷோ வம்சத்தின் ஆதிக்கம் கி. பி. 1573 முதல் 1594 வரை இருந்தது. நோபுநாகன் கி. பி. 1582-ம் வருஷத்தில் மாண்டு போனதாக தெரிகிறது.]

[யாஸோ-கிதான் என்ற அபூர்வமான புராதன ஜப்பானிய கிரந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

# மகளுக்கு மணம் செய்து வைத்தார்கள்

## I

அவர்களுடைய மூத்த பெண்ணின் படிப்பு அடுத்த மார்ச் மாதத்தோடு முடிவடைகிறது. வயசும் 'அப்படி இப்படி' என்று சீக்கிரத்தில் பதினெட்டு ஆகிவிடும். டோக்கியோவிலேயே நாகரீகத்திற்கு பெயர் போன இடத்திலே நிலம் வாங்கினுர்கள். அதிலே ஒரு நல்ல வீடு கட்டினுர்கள். வெளியே பார்த்தால் 'மேற்கத்தி' மோஸ்தர்; ஆனுல் வீட்டுக் குள்ளே எல்லாம் ஜப்பானிய 'வளமுறைதான்';-தரையில் பாய், கடுதாசித் திரை எல்லாம். ஆனுல் முன் கூடத்தைமட்டும் மேற்கத்தி மோஸ்தரில் ஜோடித்து நாற்காலி மேஜை போட்டிருந்தார்கள். தரையில் மரப்பலகையைப் பாவி இருந்தார்கள். அதற்குமேல் சீனக் கம்பளத்தை விரித்தார்கள். தற்காலத்தில் பிரபலம் பெற்ற ஜப்பானிய சிற்பிகள் செய்த சிலைகள் சித்திரக்காரர்கள் தீட்டிய, படங்கள்எல்லாவற்றையும் வாங்கி முன் கூடத்தை அலங்கரித்தார்கள். "இந்தக் காலத்திலே எல்லாரும் பியானே ஒன்று வாங்கி இந்த மாதிரி அறைகளில் வைத்திருக்கிறுர்களே" என்று கொண்டு ஒரு பியானே வாத்தியத்தையும் வாங்கி வைத்தார்கள். மூத்த பெண்ணுக்கு இனிமேல்

பியானே கற்றுக் கொடுப்பது என்ருல் முடியாது. ஆகையால் மூன்ருவது பெண்ணையும் கடைசிப் பெண்ணையும் (ஒன்பது வயசு) பியானே கற்றுக்கொள்ள அனுப்பினுர்கள். இன்னும் கொஞ்ச நாளில் வீட்டில் பியானே சத்தம் கேட்கும்; அப்படிக் கேட்பதும் பெரிய குடும்பத்துக்கு அடையாளம் என நினைத்து திருப்தியடைந்தார்கள். வீட்டுக்கு டெலிபோன் வைக்கவும் மறக்கவில்லை; டெலிபோன் நம்பரை கொட்டை எழுத்தில் வீட்டு வாசல் கதவில் பதிக்கவும் மறந்து விடவில்லை.

இனிமேல் மக்களைப் போட்டோ எடுக்கவேண்டும். எடுத்த எடுப்பிலேயே வெற்றி கிடைத்து விடுமா? பெண்கள் படங்களைப் பிடிப்பதில் ரொம்பக் கெட்டிக்காரன் என்று டோக்கியோ முழுவதிலுமே பேர் வாங்கிய ஒரு புகைப்படக்காரனிடம் மக்களை அழைத்துக்கொண்டு போனுர்கள். ரொம்பக் காக்கப் போட்டுவிட்டான்; அழகழகான பூங்கொத்துக்கள் மாதிரி உடையுடுத்து அலங்காரம் செய்துகொண்டு பல பெண்கள் இவர்களுக்கு முன்பே வந்து காத்திருந்தார்கள். கடைசியாக அவர்கள் முறையும் வந்தது. அவர்கள் மக்கள் சிரித்த முகத்தோடும் மலர்ச்சியோடும் இருக்கவேண்டும்; தவிரவும் குளுமையும் களங்கமற்ற தன்மையும் முகம் நிறைந்தாற்போல் இருக்கவேண்டும். படத்திலே உடம்பு புஷ்டியாக—கூடுமானவரை புஷ்டியாகத்—தெரியவேண்டும்; ஏனென்ருல் அவள் கொஞ்சம் ஒற்றை நாடி; 'நோஞ்சான்' என்று நினைத்துவிடக் கூடாது. போட்டோ பிடிக்கிறவன் இதை எல்லாவற்றையும் புரிந்து கொண்டான்'

ஐந்து வாரங்கள் கவலையோடு காத்திருந்த பிற்பாடு, டோக்கியோவிலேயே ரொம்பப் பெரிய 'பில்'—எதுக்கென்றாலும் அவ்வளவு பெரிசு இருக்காது—அவர்களுக்கு வந்து சேர்ந்தது. படம் வந்தது; படமும் பாதகமில்லை; இதுதானே முதல் தடவை.

பெண்ணைக் கலியாணம் செய்து கொடுப்பது என்றால் பெற்றோர் யார் என்று பார்க்கமாட்டார்களா? அதற்காக நல்லபடி உடுத்துக் கொள்ளவேண்டும்; கூடியவரை அன்னியோன்னியமாக நடந்து கொள்ளுவது போல காட்டிக் கொள்ளவேண்டும். சண்டை போட்டுக் கொள்ளுவதை நிறுத்திக்கொண்டார்கள். இரண்டு பேரும் அடிக்கடி, குழந்தையைக் கூட்டிக்கொண்டோ, அல்லது இரண்டு பேர்மட்டும் தனியாகவோ உலாவப் போனார்கள். புருஷன் இரண்டு வருஷத்திற்குமுன் செய்தது மாதிரி பெண்டாட்டி கருப்பு 'பர்' மயிர் வாங்குவதைத் தடுக்கவில்லை. ஒரு வைர மோதிரம்கூட வாங்கிக் கொடுத்துவிட்டான். நாடகம் பார்க்கப் போனார்கள்; மூத்த மகளையும் அழைத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் பேஸ் பால் விளையாட்டு, நாடகம், சினிமா எல்லாவற்றிற்கும் போனார்கள். தாங்கள் தற்காலத்திய நாகரிகப் பெற்றார்கள் என்பதைக் காட்டிக் கொள்ளுவதற்கு பேச விஷயங்களாவது வேண்டாமா?

மூத்த மகளை அதே போட்டோ கிராபர் இரண்டாந் தடவையும் எடுத்தான்; மூன்று மாசம் கழித்து எடுத்தார்கள்; அது ரொம்ப நன்றாக வந்திருந்தது. பழைய காலத்து நீண்ட கிமோனே அங்கியும், 'ஒபி' ஜரிகை காலரும் போட்டிருந்தாலும் புஷ்டியாக,

ஆரோக்கியமாக, மலர்ந்த முகத்துடன் படத்தில் விழுந்திருந்தாள். பன்னிரண்டு காப்பிகள் (நகல்கள்) எடுக்கும்படி உத்திரவு கொடுத்து அவைகளை வாங்கி நண்பர்கள், சொந்தக்காரர்கள் முதலியோரிடை வினி யோகித்தார்கள்.

## II

படம் கிடைத்த இரண்டு மூன்று நாட்களுக்கு அப்புறம், "உங்களுக்கு ஒரு நல்ல சமாச்சாரம் சொல் லப்போகிறேன்" என்றார் அவர்களுடைய நண்பர்க ளில் ஒருவர். இப்பொழுதுதான் பாசாகி பட்டம் பெற்று சர்வகலாசாலையிலிருந்து வெளிவந்திருக்கி றான். தகப்பனார் பணக்காரன். ஆணும் பெண்ணு மாக எட்டுக் குழந்தைகள்; அதில் மூத்த பையன் இந்த வாலிபன்; பையன் சர்வகலாசாலையில் பட்டம் வாங்கியவுடனேயே சர்க்கார் நிதி இலாகாவில் வேலை கிடைத்து விட்டது. வேலை கிடைக்காத இந்தக்காலத் தில் இது அதிசயமல்லவா!

ஆணும் பெண்ணுமாக எட்டு அண்ணன் தங்கை மாரா? மூத்தவன் என்றால் நல்லதுதான்; ஏனென்றால் பாரம்பரிய சொத்தில் அவனுக்குத்தான் பங்குஜாஸ்தி; இருந்தாலும் மற்றக்குழந்தைகள் கஷ்டத்தில் மாட்டிக் கொண்டால் அவனும் அவன் மனைவியும் தானே குடும் பத்துக்குப் பெரியவன் என்ற ஹோதாவில் தலையிட வேண்டியிருக்கும். நம்ம பொண் ரொம்ப சிறிசு; கல்யாணமாகி பெரிய குடும்பத்தை நடத்த அதற்கு திறமை போதாது; மேலும் இப்பொழுதுதானே ஹைஸ்கூல் படிப்பை முடித்திருக்கிறாள்; கலியாணம் பண்ணிவைப்பது என்றால் இன்னும் எவ்வளவோ

சொல்லி வைக்க வேண்டும்; "இப்பொழுது அந்த யோசனையில்லை" என்று சொல்லி மரியாதையாகத் தட்டிக் கழித்து விட்டார்கள்.

மகளும் சர்வகலாசாலையில் பட்டம் வாங்கினாள்; பெற்றோர்கள் நன்றாக நாஸுக்காக உடை உடுத்திக் கொண்டார்கள்; ஒரு மோட்டார்காரை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அவள் வாசித்த ஹைஸ்கூல்களுக்கெல்லாம் போய் சொல்லிக் கொடுத்த வாத்திமார்களுக்கெல்லாம் திருப்தியான பரிசு, ஒவ்வொருவருக்கும் கொடுத்துவிட்டு வந்தார்கள். காரணம் உபாத்தியாயர்கள் தம் பெண்ணைப்பற்றி நல்லபடியாகவே சிபாரிசு செய்வார்கள் என்பது தான். பிறகு அவளுக்கு தேநீர்ச்சடங்கு, பூ அலங்காரம் நோஹ் பாடுவது (நலங்கு பாட்டுமாதிரி) பின்னல் வேலை, எழுத்து வேலை மேற்கத்தி சுயம்பாகம், தையல்வேலை எல்லாம் கற்றுக்கொடுத்தார்கள். அவளுக்கு மேற்கத்தி, ஜப்பானிய வள முறைகள் இரண்டும் தெரிந்திருக்க வேண்டாமா? யார் மாப்பிள்ளையாக வரப்போகிறான் என்று என்ன கண்டார்கள். ஜப்பானிய தேநீர் விருந்தென்றால் நீள கிமோனோவைப் (ஜப்பானிய பெண்கள் அணியும் நீள அங்கி) போட்டுக்கொண்டு போனாள்; பேஸ்பால் விளையாட்டுக்கு அழைப்பு வந்தால் தானேதைத்து வைத்துக்கொண்டிருக்கும் அன்னிய மோஸ்தர் உடைகளை அணிந்துக் கொண்டு சென்றாள்; விருந்தாளிகள் வீட்டுக்குவந்தால், பிரஞ்சு முறையில் மகள் செய்துவைத்த பக்ஷணத்தை அவர்கள் முன்னிலையில் புகழ்ந்தார்கள்; அதுவும் பியானோமேல் ஜோடித்து வைத்த புஷ்பமும், திரைகளும் குஷன்கள் மேல் போட்டுள்ள பூ வேலைகள் எல்லாம்

அவள் செய்ததுதான். அவள் திறமைகளை எல்லாம் எடுத்துக்காட்ட வேண்டாமா; கூடுமானவரை எல்லா விதமான திறமைகளையும் பெறும்படி செய்ய வேண்டாமா ?

இரண்டாம் முறை ஒரு வரன் வந்தது. அவன் ஒரு என்ஜினியர். அவனும் பணக்காரக் குடும்பத்தில் மூத்த பையன்; ஆனால் வேலை காரணமாக அவன் எப்பொழுதும் பிரயாணம் செய்து கொண்டிருக்க வேண்டும்; அதனாலே அவன் மனைவி அவனது பெற்றோருடன் இருந்து அவர்களுக்குப் பணிவிடைசெய்து கொண்டிருக்க வேண்டியிராது. விவரங்களைப் பார்த்தால் நப்புத் தட்டுகிறது; ஆனால் ஐந்தடி மூன்றங்குலந்தான் உயரமாம். அவளும் அதே உயரம். பெண்ணுக்கு ஏற்ற வளர்த்திக்கு மேல் இருக்கிறார்" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு பேச்சை நிறுத்திக் கொண்டார்கள்.

அப்புறம் நெட்டை அபேட்சகரும் வந்தார். ஐந்தடி எட்டங்குலம் அனிகாவா; வம்சத்தைச் சேர்ந்த பிரபு. கேட்டபோதே மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மகளுக்கு இந்தப்பேறு கிடைப்பதென்றால் சும்மாவா ? அவருக்கு நந்தவனம் போடுவதிலும், புஷ்பச் செடி வளர்ப்பிலும் அபாரப் பித்தாம். தம்முடைய மாளிகையில் நந்தவனமும், உஷ்ணப் பிரதேச பூச்செடிகளுக்கு என்று செயற்கை உஷ்ணம் கொடுக்கும் 'பூ வீடும்' வைத்து நடத்துகிறாராம். தாயாருடனும் சகோதரிகளுடனும் வசிக்கிறாராம். பேச்சு ஆரம்பிக்கலாம் என்று நினைத்தார்கள். மாப்பிள்ளை வீட்டார் நிபந்தனைகள் என்னவோ? ஜமீன்தாரணியம்மாள், பெண்

வீட்டுக்கு வரும் பொழுது சீர்வகைகளில் எட்டு சொருகு உள்ள அலமாரி, மூன்று பெரிய பெட்டி, இதுக்கேற்ற துணிவகைகள் கொண்டுவர வேண்டும் என்பதாக 'தரகன்' சொன்னான், அன்னிய மோஸ்தர் உடைகள் கூடவே கூடாதாம். அவள் கொண்டு வரும் சாமான்கள் அவள் இஷ்டம்போல் விற்கக் கூடியதாக இருக்க வேண்டுமாம். தவிரவும் வருஷத்திற்கு இரண்டு தடவை பெற்றோரைப்போய் பார்த்து விட்டு வரலாமாம்; வருஷப் பிறப்பின் போதும், வருஷ மத்தியிலுமாக இரண்டுதரம் அவர்களுக்குக் கடுதாசி எழுதலாமாம்; வருஷத்திற்கு ஒரு தடவை ரொம்பவும் அன்னியோன்னியமான சிநேகிதைகளைப்போய்ப் பார்த்து விட்டு வரலாமாம். இதற்குமேல் இஷ்டப்படி வெளியே போகவோ எழுதவோ அனுமதி கிடையாதாம். "இந்த மாதிரி பிடிவாதம் பிடித்த பழம் பசலிகளுக்குப் பெண்ணைக் கொடுக்க முடியாது" என்று சொல்லிவிட்டார்கள். பொறுமை பிடித்த, குருட்டுத் தனமான, தங்களது பெருமையாலும் ஞான விருத்தி, விவகார ஞான சூன்யத்தாலும் படிப்படியாக வறுமையில் அழுந்திக்கொண்டிருக்கும் பிரபுக் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்ள உலகத்தில் உள்ள செல்வம் பூராவும் கொடுத்தாலும் முடியாது என்று விட்டு விட்டார்கள்.

## III

அப்புறம் புதுசாப் பணம் படைத்த குடும்பம் பெண் கேட்டுவந்தது.

தகப்பனார் ஒருபெரிய தொழிற்சாலை வைத்து நடத்துகிறார். பத்துலட்சம் 'என்' (ஜப்பானிய

நாணயம்) ஆஸ்தி என்று தரகன் சொன்னுன். மாப்பிள்ளை இப்பொழுதுதான் இம்பீரியல் சர்வகலா சாலையிலிருந்து ஹானர்ஸ் பட்டத்துடன் வெளியே வந்திருக்கிறுன். பார்க்கிறதற்கு அழகாக இருப் பான்; நெட்டையாகவும் இருப்பான். பையனும் தகப்பனுர்கூட அதே தொழிலில் ஈடுபட்டிருக்கிறுன். இரண்டு தங்கைகள் உண்டு, சகோதரன் கிடையாது. சொத்து முழுவதும் அவனைத்தான் சேரும். தரக னிடம் மகள் படத்தையும் பள்ளிக்கூட மார்க்குகளை யும் கொடுத்தனுப்பினுர்கள். ஒரு வாரம் கழித்து தரகன் திரும்பி வந்து, மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுவதை அந்தக் குடும்பம் விரும்புவதாகச் சொன்னுன். 'அவசரப் படாதே' என சிறிது அச்சத்தோடு சொன்னுர்கள். ஒவ்வொருவர் அந்தஸ்தையும் அறிந்து சொல்லும் இரகசிய விசாரணை இலாகாவுக்கு மனுச்செய்து கொண்டிருந்தார்கள். அதுவரட்டும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளும் என தரகரிடம் சொன்னுர் கள். தகவல் வந்தது. அவருக்கு சுமார் ஒருலட்சத்து ஐம்பதினுயிரம் 'என்' இருக்கலாம். அவருக்கு இரண்டு வைப்பாட்டிமார் உண்டு; அந்த வழியில் ஐந்து குழந்தைகளும் உண்டு. சொத்துக்கு வாரி சான வாலிபன் ஒரு ஹோட்டல் பணிப்பெண்ணிடம் 'சம்பந்தம்' வைத்துக் கொண்டிருந்தான். அது போதாதா? பார்த்ததும் நடுநடுங்கினுர்கள். ஆதி முதலே தரகர்மேல் சந்தேகம். அவள் முழிக்கிற முழியைப்பார்த்தாலே பழைய காலத்து நினைப்புள் ளவள்; அவளுக்கு கலியாணம் என்ருல் இரண்டு குடும்பங்களுக்குள் ஏற்படும் வெறும் தொடர்புதான்.

கலியாணத்திற்கு அப்புறம் கமிஷன் வாங்கியபின் அந்தப் பொறுப்பைப் பற்றி அவள் ஜவாப்தாரியல்ல. ‘தரகச்சி வார்த்தையில் சவாரி செய்வதா’ என நினைத்தார்கள்.

அப்புறம் பல அபேட்சகர்கள் வந்தார்கள். ஒரு கெட்டிக்கார ஏழை வாலிபன்; அவனுக்கு டாக்டர் ஆக வேண்டும் என்று ஆசை. கொஞ்சம் கனமாகவே ஸ்ரீதனம் கொண்டுவந்தால் பொருட்படுத்துவான்; ஆனால் இப்பொழுதுதான் எத்தனையோ பேர் அந்தமாதிரி கிடைக்குமே. பெண்டாட்டியின் பணத்தை வைத்துக் கொண்டு முன்னுக்கு வருவது பிறகு அதைமறந்துவிட்டு வைப்பாட்டிகளை விலைக்கு வாங்குவது. அப்புறம் ஒரு வாலிப நீதிபதி. வயசு இருபத்தி ஒன்பதுதான். இருந்தாலும் ஒன்பது வருஷ வித்தியாசம் இருக்குமே. ஒன்பது அதிர்ஷ்டம்கெட்ட எண். ஒன்பது வயசு வித்தியாசமுள்ள தம்பதிகள் வயசாகும் வரை ஒன்றாக வாழ்ந்ததில்லை. அப்புறம் ஒரு காலேஜ் புரொபெஸர் சம்பளமும் ரொம்பக் கொஞ்சந்தான். பிறகு ஒரு ராணுவ உத்தியோகஸ்தர்; ஒரு பேரன் (பிரபு அந்தஸ்து) ‘வேண்டாம் ஐயா; சோல்ஜர்கள் பேச்சே நமக்கு வேண்டாம்.’

“பொண்ணைக் கலியாணம் செய்து கொடுப்பது என்றால் என்ன சிரமம்” என பெற்றோர்கள் ஒருவரை யொருவர் பார்த்து பெருமூச்சுவிட்டுக் கொண்டார்கள். மூன்று வருஷமாக ஆகிறதே, இன்னும் எத்தனைநாள் இந்த மன உளைச்சல். இரண்டாவது பெண்ணுக்கும் கலியாணத்துக்கு வயதாகிவிட்டது. குழந்தைகளை வேனிற்காலம் முழுவதும் கடல்கரை

சுகவாசஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டு போவது என்று தீர்மானித்தார்கள். மூத்தபெண் ரொம்ப ஒற்றைநாடியாகவும் இளைத்துப் போனவள் போல வும் காணப்பட்டாள். வேனிற்காலத்தில் இந்தமாதிரி பெண்களை நாஸுக் இல்லை.

## IV

இப்படியாக தாயார் குழந்தைகளை அழைத்துக் கொண்டு நாஸுக்கான கடல்கரை சுகவாசஸ்தலத் திற்குச் சென்றுள். வேனிற்காலம் முழுமையும் அங்கேயே தங்கினர்கள். தகப்பனர் மட்டும் வாரக் கடைசியில் வந்து போய்க் கொண்டிருந்தார். புருஷனைவிட்டுத் தனியாக இருப்பதிலும் ஒருசுகம் இருக்கத்தான் செய்கிறது. ஏவின வேலைக்கு ஏன் என்று கேட்க ஹோட்டலில் பணியாட்கள். சுகமா கத்தான் இருக்கிறது என நினைத்தாள் தாயார். மகள் கலியாண வயசில் இருப்பதினுல் அல்லவா இந்தப் பாக்கியம். "வெயிலிலே உடம்பைக் கருகவைத்துக் கொள்ளவேண்டாம்; மாப்பிள்ளைக்கு ஏற்ற வாலி பன் வருகிருனு என்று கவனி!" என்று தகப்பனர் தாயாருக்கு உத்திரவுபோட்டார்.

ஆனல் தாயாருக்கு அங்குதென்பட்ட வாலிபர் களிடம் பேசவோ அல்லது பழக்கப்படுத்திக் கொள் ளவோ தைரியம் போதவில்லை. அவளால் செய்யமுடிந் தது எல்லாம் இதுதான்; மகளை அழகாகச் சிவிச்சிங் காரித்து கடல் கரைக்கு 'உலாவ' அழைத்துக் கொண்டு போவாள். நல்ல வம்சத்தில் பிறந்த கற்பனை மிகுந்த வாலிபன் யாராவது மகளைக் கண்டதும் காதல் கொள்ளுவான் என்று நம்பினுள். மகளுக்கு ஸ்நான

வுடை ஏற்றதாக இல்லை; தகப்பனுர் ரொம்பப் பணத்திற்குத்தான் வாங்கிக் கொடுத்தார்; ஆகையால் வாலிபர்கள் தென்பட்டால்தான் அதை உடுத்துக் கொண்டு குளிப்பதற்கு மகளை அனுமதிப்பாள் தாயார்.

உடன்பலன் ஏதும் ஏற்படவில்லை; ஆனுல் தகப்பனுரும் தாயாரும் 'குழந்தையை' மறுபடியும் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகையில் கொஞ்சம் திடமாக இருப்பது கண்டு திருப்தியடைந்தார்கள். ரொம்பச் செலவில் குஷியாகக் கழிந்த 'விடுமுறை'யைப் பற்றி பேசிக் கொண்டார்கள். செலவைக் கொண்டுவந்த வேனில் நல்ல பலனைத்தான் அளித்தது என்று பேசிக் கொண்டார்கள்.

"வாஸ்தவமாகவே நல்ல சமாசாரம்" என்று சொன்னுர் அவர்களுடைய நண்பர்களில் ஒருவர். வாலிபன் பாங்கி குமாஸ்தா; ஆனுல் தகப்பனுர் தென்கடல் வர்த்தகக் கம்பெனி ஒன்றில் டைரக்டர்; குடும்பத்தில் மூன்று ஆண் குழந்தைகள்; இவர் இரண்டாவது; தவிர ஒரு பெண்ணும் உண்டு. அவள் இம்பீரியல் சர்வகலாசாலையில் பட்டதாரி; இருபத்தியேழு வயசு. நெட்டையாக, அழகாக இருப்பான். அவனுடைய அண்ணு ஒரு பேரனுடைய மகளைக் கலியாணம் செய்துகொண்டு சமுத்திரக்கரையருகில் உள்ள தங்கள் சிறுவீட்டில் மனைவியுடனும் மகனுடனும் வசித்து வருகிருன்; ஏனென்ருல் மோட்டார் விபத்தால், நிரந்தர வியாதியஸ்தனுக ஆகிவிட்டான்.

"இரண்டாவது பிள்ளை; மூத்தவன் வியாதியில் படுத்துவிட்டான்"...........தகப்பனுர் இரண்டை

யும் எடை போட்டுப்பார்த்தார். சொத்தில் முக்கால் வாசி மூத்தவனுக்குப் போகும்; அவன் இறந்தால் அவனுடைய மகனுக்குப் போகும். இரண்டாவது மகனும் தன் மனைவியும் டோக்கியோவில் பெற்றோருடன் வசித்து அவர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்; ஆனால் குடும்பச் சொத்து கிடைக்காது. இது நியாயமா, தகப்பன் தான் நல்ல சொத்தும் பிரபலமும் வாய்ந்தவராச்சே. யோசித்துப் பார்க்கிறோம்...............

அந்தஸ்து விவர அறிவிப்பு ஸ்தாபனத்திற்கு மனுச் செய்துகொண்டார்கள்; தகவல்கள் வருமாறு: குடும்ப சொத்து ஐந்து லட்சம். உறவினரும் நல்ல செயலில் இருக்கிறார்கள்; வைப்பாட்டியோ, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் குடும்ப வியாதியோ கிடையாது; பையனும் யோக்கியமாகவே நடந்து வந்திருக்கிறான். எல்லாம் விரும்பத்தக்கதாகத் தான் இருந்தது. அந்த ஐந்து லட்சத்தில் எவ்வளவு இந்தப் பையனுக்குக் கிடைக்கும் என்பதை தெரிந்துகொள்ள விரும்பினார்கள்; அதைப் பற்றிக் கேட்பது மரியாதையா? எல்லா அம்சங்களிலும் பூரணமாகத் திருப்தி ஏற்படுகிறது என்றால் நடக்கிறகாரியமா? மகள் கலியாணமாகும் பருவத்தை இப்பவும் பரிசீலனையிலேயே கழித்து விடுவதா? நான்கையும் யோசித்துவிட்டு வாலிபனைப் பார்க்க வேணும் என்றனர்; அதன் அதர்த்தம் என்ன; மகளை அவனுக்கு கலியாணம் செய்து கொடுக்கத் தயார் என்பது தான். எதிர்த்தரப்பிலிருந்தும் 'சரி' என்றே பதில் வந்தது.

V

வரன்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுவதற்கு நாள் நிச்சயிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு 'கபூக்கி' நாடகக் கொட்டையில் தரகர் இரண்டு 'பாக்ஸ்'களை அமர்த்தினர்; இரண்டு குடும்பங்களும் பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்து கொள்ள. அன்று விடியற்காலை அழகு நிபுணி பெரிய அலங்காரப் பெட்டியும் கையுமாக வந்தாள்.

அவள் பெண்ணின் முகத்தை கழுவி 'மாலீஸ்' செய்து வர்ணம் ஏற்றினுள். தலை மயிரை தற்கால நாகரிக மோஸ்தரில் நெற்றியில் சுருள் சுருளாக விழும்படி சீவிப் பணிய வைத்தாள். அடுக்கடுக்காக கண்ணைப் பறிக்கும் பட்டு கிமோனுவை அணிவித்து அகலமான 'ஓபி' உத்தரியத்தை வைத்து இறுகக் கட்டினுள். பெண் நாணத்தால் முகம் சிவந்து முழு நேரமும் ஒரு வார்த்தைகூட பேசாமல் உட்கார்ந்திருந்தாள். மோட்டார் காரில் நாடகக் கொட்டகைக்குப் போனுர்கள்; 'பாக்ஸு'களுள்' மரியாதையாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்; பாய்த் தரையில் போட்ட குஷன் மெத்தைகளில் உட்கார்ந்தார்கள்.

அப்பொழுதுதான் திரை உயரச் சென்றது. ஆனுல் பல வர்ணப் படாடோப உடைகளில் தோன்றியவர்கள் என்ன செய்கிறுர்கள் என்பதைப் பார்க்கக்கூட சிரத்தை கொள்ளவில்லை. அப்புறம், அந்தக் கோஷ்டியும் வந்தது; ஜப்பானிய சம்பிரதாய உடையில் பெற்றேர்கள்; நாஸுக் வெட்டுகளில் தைக்கப்பட்ட மேற்கத்தி உடையில் அழகான அந்த வாலிபன் வந்தான். தரகர் தம்பதிகளும் அவர்களுடன் வந்து

அறிமுகம் செய்து வைத்தார்கள். பெண் நாணத்தால் குனிந்தமுகத்தை நிமிரவே இல்லை; சமயா சமயங்களில் புன்சிரிப்புடன் தலை வணங்கினாள். வாலிபனும் அவன் பெற்றோர்களும் அவள் முகத்தைப் பார்த்தார்களோ என்னவோ!

மறுநாள் தரகரும் அவர் மனைவியும் வந்தார்கள்,- ஜாதகத்தையும் பஞ்சாங்கத்தையும் பார்த்தார்கள். சீர்வரிசை பறிமாறிக் கொள்ளும் தினத்தையும் கலியாண நாளையும் நிச்சயித்தனர். முன்னது நவம்பர் மூன்றாந்தேதி என்றும் மற்றது டிஸம்பர் பதினைந்தாம் தேதி என்றும் நிச்சயித்தார்கள். "காயை உருட்டியாகிவிட்டது" என்றார்கள் பெற்றோர்; பெண்ணை இருளடித்துப்போன விதி என்ற பாதாளத்தில் உருட்டியது மாதிரிக் கருதினார்கள். அவர்கள் முக்கியமாக அவளது தகப்பனார், சோகத்திற்கு ஆட்பட்டார்; பிரமாதமான அசட்டு நம்பிக்கைகள் எல்லாம் அவரைக் கவ்விக் கொண்டன. முதல் நட்சத்திரத்தின் வர்ணம் வெள்ளை (அது மகளின் ஜன்ம நட்சத்திரம்), ரொம்ப அதிர்ஷ்டமுள்ளது; மூன்றாவது நட்சத்திரம் (மாப்பிள்ளையாக வரப்போகிறவரின் நட்சத்திரம்) நீல வர்ணமுடையது; இரண்டிற்கும் ஒருபொருத்தம் உண்டு என்றது பஞ்சாங்கம். ராசி மண்டல சின்னங்களைப் பொறுத்தவரை மகளுடையது கோழி; வரப்போகும் வரனுடையது புலி,— இரண்டின் இணைப்பும் கெடுதல் அல்லவே அல்ல- முதல் வெண் நட்சத்திர ஸ்திரீக்கு நவம்பர் மூன்றாந் தேதி ரொம்ப சுகமான தினம்; டிஸம்பர் பதினைந்தாம் தேதியோ அந்த வருஷத்தில் யாவருக்கும் அதிர்ஷ்டம் மிகுந்த தினம். எல்லாம் பொருத்த

மாகத்தான் இருந்தது; இருந்தாலும் தகப்பனுருக்கு என்னவோ கவலைதான்;

சாமான்களைத் தனித்தனி இலாகாவாகப் பிரித்து நிர்வகிக்கும் பெரிய கடை ஒன்றுக்கு அவர்கள் சென்று நிச்சயதார்த்த சீர்வரிசைகளை வாங்கினுர்கள். மறுநாள் எல்லாச் சாமான்களும் சடங்குகளுக்கு உபயோகிக்கக்கூடிய மாதிரியில் வீட்டுக்கு வந்து சேர்ந்தன. பெரிய மரப் பெட்டியில் இங்கிலீஷ் 'செர்ஜ்' கம்பளித் துணி சுருணையாகச் சுருட்டி வைக்கப்பட்டு, நல்ல முரட்டு வெள்ளைக் கடுதாசியில் பொதிந்து ஜரிகை நாடாக்களில் கட்டி 'ஷின்டோ' மரவையில் வைக்கப் பட்டிருந்தது. இந்த இங்கிலீஷ் செர்ஜ் மாப்பிள்ளைக்கு நாஸுக்கான ஸுட் தைக்க; ரொம்பவும் நாகரிகமான சீர். சம்பந்திகளின் வாடாத செழிப்புக்கு அடையாளமாக வெள்ளை சிகப்பு வர்ணங்களில் காகித விசிறிகள். அந்தக் குடும்பத்தில் ஒன்றுவிட்ட மைத்துனன்வரை எல்லோருடைய பெய்ரையும் கிரமமாக பட்டியல்செய்து சேர்த்து 'வாழ்த்தி' வைக்கப்பட்டது. இவை தரகர் வீட்டில் வைத்து பரஸ்பரம் பறிமாறிக் கொள்ளப்பட்டது. மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண்ணுக்கு இடுப்பில் சுற்ற வேண்டிய அகலமான 'ஓபி' உத்தரியத்தை அழகாக வைத்துக் கொடுத்தார்கள். நிச்சயதார்த்த சீர்களை மாற்றிக் கொண்டபின் கலியாண பந்தகத்தை யாரும் மீறமுடியாது; கூடாது.

மாப்பிள்ளை வீட்டுக்காரரும் விவேகிகள், லௌகிகம் தெரிந்தவர்கள் ; பெண் கொண்டுவர வேண்டிய சீர் சீதனம் முதலியவை பற்றி 'அறுத்துப்' பேச

வில்லை. இது பெண்ணின் தகப்பனருக்கு ரொம்பத் திருப்தியாக இருந்தது; தகப்பனர் லோகம் தெரிந்த வர்; அனுபவசாலி; சீர்களை குறைந்த அளவில் வைத்துக்கொண்டு சீதனத் தொகையை அழியாத என்றைக்கும் பணமாக்கக்கூடிய பங்குகள், பத்திரங்களாகக் கொடுக்கவேண்டும் என்று நினைத்தார். பணத்தை ரொக்கமாகக் கொடுத்தால்,—தான் மனைவியிடம் அந்தக் காலத்தில் நடந்துகொண்டதை வைத்து நினைத்து 'ஷோக் சுந்தரிகளுடன் விளையாடி விடுவதற்கு வசதி செய்வதாகும் என நினைத்தார். "விலையுயர்ந்த துணி மணிகளில் தான் ஆபத்தில்லை; மேலும் மாப்பிள்ளையின் அண்ணன் மனைவி பெரிய குடும்பத்துப் பெண். அவள் கொண்டுவந்த திருமண ஜவுளி வகைகளை விட இவளுக்கு விலையுயர்ந்ததாக இருந்தால் தான் இவளை துச்சமாக நினைத்து அவமதிக்காமல் இருப்பாள்" என்று தாயார் தினசரி இரவும் பகலும் கலியாணச் சாமான்கள் வாங்கப் போகும் பொழுது எல்லாம் சொன்னுள்.

வெள்ளி, தங்கம் கில்வைத்த கருங்காலி அலமாரி, ஐந்து சொருகு உள்ளது; அது நிறைய கணக்கில்லாமல் பட்கிக் கிமோனே அங்கி; ஜரிகை பின்னல் வேலைகள் செய்த ஓபி உத்தரியங்கள்; அலமாரியைத் திறந்து பார்த்தால் வானவில்லை எல்லாம் மடித்து 'இஸ்திரி' போட்டு பெட்டியில் மடக்கி வைத்த மாதிரி இருக்கும். தலைவாரி சீவி முடித்துக் கொள்ள ஒரு தனி மேஜை; அதிலேமுத்துப் பதித்த ஆமையோட்டு கொண்டை ஊசிகள், நீலக்கல், பவளரகங்கள். இன்னும் மூன்று பெரிய பெட்டிகள் நிறைய

படுக்கை மெத்தை, தலையணை, தேனீர் செட்டுகள், மேற்கத்தி மோஸ்தரில் அமைந்த வீட்டுக்கு வேண்டிய தட்டு முட்டு சாமான்கள், பாத்திர வகைகள். இதற்கப்புறம் ஒரு பெரிய பெட்டியும் சேர்க்கப்பட்டது. இதில் மணப்பெண் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றவுடன் தன்னுடைய பெற்றோர், உறவினர், பந்துக்கள், சிநேகிதர்கள், ஊழியர்கள் முதலியோருக்குப் பரிசாக வழங்கவேண்டிய பட்டு, ஜரிகைப்பெட்டி கொண்டை ஊசி, வெண்கலத் தாலங்கள், பொம்மைகள் முதலியன நிறைத்து வைக்கப்பட்டது. எல்லாம் மொத்தம் ஐம்பத்தியைந்து பேருக்கு பரிசுகள்.

மணப்பெண் ஜவுளி வகைக்கு மட்டும் இருபத்தி ஐயாயிரம் யென் செலவாச்சு; "என் அருமந்த மகளுடன் இவ்வளவையும் கொடுக்க வேண்டுமே" என தகப்பனார் பெருமூச்சு விட்டார். இவை எல்லாவற்றையும் மாப்பிள்ளை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போகுமுன், பெண்ணின் அத்தை, சித்தி, மைத்துனிமாருக்கெல்லாம் காட்டப்பட்டது. ஒவ்வொரு சாமானும் என்ன விலையாச்சு என்று சுற்றி நின்ற சொந்தக்காரர்களிடம் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்; அலங்கார உடையணிந்த ஊழியர் தலையிலேற்றி ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டும் என விரும்பினர்; ஆனால் டோக்கியோவில் அந்தப் பழக்கம் பழசாப் போச்சு; அதனால் கலியாணத்திற்கு இரண்டு நாள் முன்னதாக இரண்டு மோட்டார் லாரிகள் நிறைய ஏற்றி அங்கு கொண்டு போனார்கள்; சம்பிரதாயப்படி, சீர்வகைச் சாமான்களை பெண்ணின் தகப்பனார் இனம் இனமாகச்

சொல்லிக் கொடுத்து விட்டு விவரப்பட்டியலையும் சாவிக் கொத்தையும் ஒப்படைத்தார்.

கலியாணச் சடங்கின் போது பெண்ணுக்கு மேலங்கியைப்போடுவதில்லையென்ற உறுதிமொழியை பெண்ணின் பெற்றோர்கள் மாப்பிள்ளை வீட்டுக்காரரிடமிருந்து பெற்றுக் கொண்டு திரும்பினார்கள். இந்த மேலங்கியை ஒரே ஒரு தடவை தான் உபயோகிக்க முடியும். அதில் ஜரிகை, பின்னல், சித்திர வேலை எல்லாம் சேர்த்து பல நூறு 'என்னுக்கு' செலவு இழுத்து விட்டது. மேலும் டோக்கியோவில் இந்தக் காலத்தில் அதைப்போடும் வழக்கமே போய் விட்டது. மணப்பெண்ணுக்கு, 'கைகள்' தரையில் புரளும் சம்பிரதாயக் கிமோனோ அங்கி அணிவிக்கப் பட்டது. அங்கியின் 'உடல்' கறுப்பு ; ஆனால் சவுக்கை பின் ஊசி இலைகள், பழக்கொத்துக்கள், மூங்கில் இலைகள் இவை நிறைத்து பின்னப்பட்டிருந்தன. கற்பு, உறுதி, தன்னடக்கம் மூன்றின் உருவங்கள் அவை மூன்றும். அந்த உடைக்குள் வெள்ளை, சிகப்பு கிமோனோ அங்கிகளைப் போட்டிருந்தார்கள் ; சம்பிர தாய 'ஓபி' உத்தரீயம் தங்க - வெள்ளி ஜரிகையில் பின்னியது. கேசம், மணப் பெண்ணுக்குரிய சம்பிர தாயக் கொண்டையிடப்பட்டு ஊசி குத்தப்பட்டிருந்தது. கொண்டையை மறைக்க வெள்ளைச் சல்லாப் பட்டு முக்காடு இட்டார்கள். இந்த முக்காடு பெண்ணின் பணிவைக் குறிக்கிறது. கொண்டை பெண்ணுக் குறிய பொறுமைக் குணத்தைக் காட்டுகிறது. கணவன் பரஸ்திரீ நாட்டத்தில் ஈடுபடுவதாகத் தெரிந்தாலும், தன் வாழ்வு முழுவதும் அந்தப் பொறுமையை மறைத்துக் கொள்ளுவதாக உறுதி கொடுப்பதற்கு

அடையாளம் அந்த முக்காடு. இவ்வளவு கேவலமான அர்த்தம் பொதிந்த முக்காட்டைப் போடுவதில் பெண்ணின் தகப்பனுருக்கு சிறிது அதிருப்தி; 'என்னடா காட்டு மிராண்டிப் பழக்கம்' என வாழையடி வாழையாக வந்த சடங்கைப் பற்றி நினைத்தார். எப்படியானுலும் எந்த நிலைமையையும் பொறுமையுடன் சகிப்பது தான் பெண்ணுக்குஅழகு. பெண்ணைப் பழைய முறையில் சிங்காரித்து மேற்கத்தி மோஸ்தரில் ஸூட் போட்ட வாலிபன்கையில் பிடித்துக் கொடுப்பது விபரீதமாகப் படவில்லை மகள் மேல் ஆசை தழுவும் தகப்பனுருக்கு! ஏன், அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவருக்காவது அது விபரீதமாகப்படவில்லை. நாகரிக டோக்கியோவில் அந்த மாதிரிதான் எல்லா இடத்திலும் கலியாணம் நடக்கிறது.

## VI

கலியாணச் சடங்கு அமாதராஸு என்ற * சூர்ய தேவியின் மகாலயத்தில் நடந்தது. தேவியின் சன்னிதானத்தில் ஷின்டோ அர்ச்சகர்கள் தம்பதிகளை பரிசுத்தப் படுத்தினுர்கள்; உற்ருர் உறவினர் சகாகி மரக்கொப்புகளை அவர்கள் தலைமீது விசிறினுர்கள். பிரதம அர்ச்சகர் தேவியையும் அவள் பரிவாரமான எண்பது லட்சம் தெய்வங்களையும் அழைக்க மூன்று முறை கைகளைத் தட்டினுர். பவித்திரமான அரிசிபானத்தை மண்கலசத்தில் அளித்தார்; தம்பதிகள் அதை மூன்று முறை அருந்தினுர்கள். சம்பந்தி

* ஜப்பானில் சூரியன் பெண்தெய்வம். ரசக்குறைவுஇல்லாமல் இருக்க சூரியனுக்கு பெண்பால் உபயோகிப்பதற்குப் பதிலாக சூரிய தேவி எனக் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஐக்கியத்தைக் காட்ட இருதிறத்து உறவினரும் கல சங்கள் பறிமாறிக் கொண்டனர். 'இட்டிலிகள்' பட்சணங்கள், பழவகைகள், காய்கறிகள் மலைமலை யாக சன்னிதானத்தில் குவிக்கப்பட்டன. ஷின்டோ இசை புராதன சுருதிகளை தாங்கி எழுந்தன.

ஷின்டோ திருமணக் கிரியைக்குப் பிறகு, டோக் கியோவிலேயே மேற்கத்தி மோஸ்தருக்குப் பேர் பெற்ற இம்பீரியல் ஹோட்டல் விருந்து மண்டபத் தில் மறுவீட்டு விருந்து நடந்தது. சம்பந்திகள் விருந்தினர் யாவரும் ஹோட்டலுக்கு மோட்டாரில் சென்றார்கள். தம்பதிகள் இருவரும் ஒரு காரில் தரகுத் தம்பதிகள் துணைவர தனியாகச் சென்றார்கள். வரவேற்பு மண்டபத்திற்கு வருமுன் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட தோழிகள் திருமண உடையைக் கழற்றி இளம் லவங்கப்பட்டை வர்ணத்தில் உள்ள பூப்போட்ட பட்டாடையை அணிவித்தார்கள். மண் டபத்தின் நடுவில் போடப்பட்ட பெரியமேஜையின் மத்தியில் மாப்பிள்ளைக்கு அருகில் உட்காரவைக்கப் பட்டாள். அவர்களுக்கு இரண்டு பக்கத்திலும் தரகரும் அவர் மனைவியும் உட்கார்ந்து கொண்டார் கள். இருநூறு விருந்தினருக்குமேல் வந்திருந்தார்கள். ஆண்கள் மேற்கத்தி மோஸ்தர் 'குருவிவால்' சட்டை யிலும், கலியாணமான ஸ்ரீகள் கறுப்பு கிமோனோ அங்கியிலும், கலியாணமாகாத பெண்கள் பலவர்ண கிமோனுக்களிலும் வந்திருந்தனர். விருந்து மேற்கத்தி மோஸ்தரில் இருந்தது. இரு சம்பந்தி வீட்டுக்காரர் களும் பழக்கமில்லாத கத்தியும் 'முள்ளும்' உபயோ கித்து உணவுவகைகளுடன் போராடினார்கள்; மது

வும் வான்கோழிக் கறியுமானாலும் சாப்பிடும்போது பேசுவது மரியாதைக்குறைவு.

சாப்பாடு முடிந்தது பழங்கள் பரிமாறப்படும் போது தரகுத்தம்பதிகள் எழுந்து நின்றார்கள். மணமகனும் மணப் பெண்ணும் எழுந்து நின்றார்கள். தரகர், தம்பதிகளை விருந்தினருக்கு அறிமுகம் செய்து வைத்து இருவருடைய படிப்புதிறமை பற்றிய விவரங்களை வாசித்து, விருந்தினர் யாவரும் அநுபவம் இல்லாத இந்த யுவ தம்பதிகளுக்கு வாழ்வில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என புத்தி சொல்லவேண்டும் என்று பேசி முடித்தார். விருந்தினர் சார்பாக சில பெரியவர்கள், எழுந்து ஆசி கூறினார்கள்; ஐஸ் கிரீமும் காப்பியும் பரிமாறப்பட்டது.

விருந்து முடிந்தும் மணப்பெண் மாமியாருடனும் தரகர் மனைவியுடனும் உள்ளே சென்றாள். உள்ளே சென்று குளித்து, முகத்தில் அப்பியிருந்த வெள்ளை வர்ணத்தைத்தேய்த்துக் கழுவினாள். கலியாணக் கொண்டை அவிழ்க்கப்பட்டு மின்சார விசிறியால் உலர்த்திக் கோதப்பட்டு தற்கால மோஸ்தர்படி சுருள் சுருளாக சிங்காரிக்கப்பட்டது. முந்தியைப் போல் அடியோடு சம்பிரதாயத்தைப் பின்பற்றாமலும் ஆனால் அதைவிட்டு அடியோடு விலகாமலும் உள்ள ஒரு கிமோனோ அங்கியை அணிந்து கொண்டாள். அவள் இப்பொழுது * திருமண—யாத்திரைக்கு தயார். தாயாரும் தகப்பனாரும் கவலையுடன் காத்

* திருமண—யாத்திரை என்பது மேற்கத்தி வழக்கம். கலியாணமானவுடன் தம்பதிகள் பரஸ்பரம் அறிந்துகொள்ள தனியாக யாத்திரை செய்தல் - வாழ்வின் தாம்பத்ய யாத்திரைக்கு உருவகம்.

திருந்தனர். யாத்திரை உடையில் மாமியாருடன் அவள் வருவதைக் கண்டதும் பெற்றோர் இருவருடைய உள்ளத்திலும் பொறாமையும் தோல்வியும் ஆழமாகக் குத்தியது. சம்பந்திகளை மரியாதையாக வணங்கினார்கள். "பெண் சிறிசு; அனுபவமில்லாதவள், சம்பந்தியவர்கள்ரெண்டுபேரும் தாட்சண்யமில்லாது கண்டிப்பாக வளர்க்க வேண்டும்" என வேண்டிக் கொண்டார்கள்.

மோட்டார் தயாராக வாசலில் நின்றது. விருந்தினர்கள் ஹோட்டல் முகப்பில் நின்று வழியனுப்பினார்கள்; தம்பதிகள் டோக்கியோ ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். 9-15 க்குச் செல்லும் **அடாமி** பிளாட்பாரத்தில் தயாராக நின்றது. பூமாலைகளில் புதையுண்டு முதல் வகுப்பு வண்டியில் உட்கார்ந்திருந்தார்கள். வருஷம் முழுவதிலும் இதுவே ரொம்ப அதிர்ஷ்டம் வாய்ந்த நாளாகையால் அன்று பல ஜோடிகளுக்குக் கலியாணம் நடந்திருந்தது; அவர்களைப் போல முதல் இரவை மகாஅடாமி ஹோட்டலில் கழிக்க தீர்மானித்து இருந்தார்கள்; ஏனென்றால் இது ஜப்பானிய முறையில் அல்லாமல் பெரிய சுவர்கள் வைத்த அறைகளும் சாவியும் தாழ்ப்பாளும் உள்ள கதவுகளும் அமைந்த ஹோட்டல்; ஜப்பானிய ஹோட்டல் என்றால் கடுதாசித் திரைதான் போட்டிருக்கும். மேலும் அந்த ஹோட்டலில் சுகமாக வென்னீரில் ஸ்நானம் செய்ய வசதியுண்டு. மறுநாள் மலைச்சாரல்களிலும் கடற்கரையிலும் கை கோர்த்து உலாவித் திரிய வசதியுண்டு. குதூகலம் நிறைந்த வாலிபர்கள் மேற்கத்தி ஸூட் அணிந்திருந்தனர்; நாணங்கனிவால்

சிவந்த புதுமணப் பெண்கள் சிவந்த கிமோனே அணிந்திருந்தனர்; சிகப்பு மாரிக்கு அடுத்த வர்ணம்; உறவினரிடம் வழியனுப்பிக்கொள்ள ஜன்னல் வழியாகத் தலை நீட்டினர். "ஒரு ஜோடியிலிருந்து மற்ெருரு ஜோடியை அடையாளம் கண்டு பிடிப்பது எவ்வளவு கஷ்டம்" என பெற்றேர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். "அவள் புருஷன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும்; ஒரு தடவை தவறிவிட்டால், அப்புறம் அவனை அடையாளம் கண்டு கொள்ளுவாளோ என்னவோ" அவனை ஒரு முறைதானே இதற்கு முன் பார்த்திருக்கிருள் என்ற கவலை பெற்றேருக்கு. பெண்ணின் முகம் 'தூங்கி' இருந்தது. அவள் உள்ளே தலையை இழுத்தாள்; வண்டியும் புறப்பட்டது.

"அவள் போய்விட்டாள்; இனி வேறு ஒரு குடும்பத்திற்குச் சொந்தம்" என வருத்தத்துடன் சொல்லிக் கொண்டு, ஈடு செய்து கொள்ள முடியாத தங்கள் நஷ்டத்தைப் பற்றிச் சிந்தித்தார்கள்.

---

## சிரித்தமுகக்காரன்

அவன் சோகமாக இருக்கிறான், தனியாக இருக்கிறான் என்று சொல்லி விடுவது எளிது; ஆனால் அவன் எப்பொழுது பார்த்தாலும் சிரித்த முகத்தோடேயே இருக்கிறான். அப்படிச் சொல்லி விட்டாலும், அவனைப் பாட்டிலில் போட்டு அடைத்து லேபில் ஒட்டி வைத்த மாதிரியாகும்; 'ஐயோ பாவம்! என்ன துயரமான கதை, என்ன சோகப்பட்ட மனுஷன், லோகத்திலே நம் கண்ணில் படாமல் எவ்வளவு தீரர்கள் இருக்கிறார்கள்!' என்று எல்லாம் சொல்லச் சொல்லும்படி ஒன்றுமில்லை. அவன் ரொம்ப சாதாரண மனுஷன்; அவனைப் போன்றவர்களை எங்கும் பார்க்கலாம். அவனுடைய நிலைமையும் சாதாரணம்; ரொம்ப சர்வசாதாரணம். அதனால்தான் அவன் உலகத்தின் கண்ணில் விழாமல், மறைந்து, உலகம் இழந்த ஒருவனாக இருக்கிறான்.

அவன் ஜப்பானியன். ஹாரிஸன் ஏழாந் தெரு பார்க் பெஞ்சில் உட்கார்ந்து, போய்க்கொண்டும் வந்து கொண்டு மிருக்கும் ஜனங்களை நிர்விசாரமாகப் பார்த்துக் கவனித்துப் பொழுதைப் போக்குகிறான். இன்று ஞாயிற்றுக்கிழமை யானதினால் தன் நேரத்தை, (உலகத்தின் நேரத்தைச்) செலவு செய்து கொண்டிருக்கிறான்; இந்த மகா லோகத்துடன் மறுபடியும் உறவு கொண்டு விடுவதற்காக, "நாம் ஏன் கஷ்டப்படு

றோம்" என்பதைக் கண்டுபிடிப்பதற்குச் சோகமாக, தனியாக உட்கார்ந்து பொழுதைக் கழிக்கிறான். அவன் ரொம்ப நேரம் யோசிக்கவில்லை; பெரிய சித்தாந்திகள் மாதிரி ஆர அமர உட்கார்ந்து மனசைத் துருவவில்லை. அதற்குப் பதிலாகச் சும்மா உட்கார்ந்து இருந்தான். அப்புறம் வெகு சீக்கிரத்தில், சோகத்தின் தனிமையிலிருந்து வெளி வந்தது சிரிப்பு; மகிழ்ச்சியால் அல்ல; சோகத்தாலும் அல்ல. அப்போதுதான் நான் அவன் முகத்தைப் பார்த்தேன். அழகான தோன்றலல்ல; சர்வ சாதாரணமானதுதான்; எங்கேயும் பார்க்கக் கூடியதுதான்.

அவன் பெயர் என்னவானால் என்ன? அதனால் பிரமாதமாக வித்தியாசம் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை; இருந்தாலும் அவன் பெயர் **த்ஸ"முரா.** ஹாரிஸன் ஏழாந்தெரு பார்க் பெஞ்சில் அவன் உட்கார்ந்திருக்கும்பொழுது அவனைக் கண்டேன். நான் ஒரு மரத்தடியிலிருந்து ஒரு புஸ்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கையில் ஏறிட்டுப் பார்த்தபொழுது அவனைக் கண்டேன். அன்னியன் ஒருவன் யார் என்பதை நிர்ணயிக்க மனசு செய்யும் முயற்சியே ஒரு ரசமான யாத்திரை. நான் புஸ்தகத்தை வாசிப்பது போன்ற பாவனையில் அவனைக் கவனித்தேன்; ஞாயிற்றுக்கிழமைகளில் பார்க்கு பெஞ்சில் உட்காரும் நபர்களைப் போலத்தான் அவனும் இருந்தான்; யார் என்ற யோசனை ஆரம்பிக்கையில் அவன் என் மனசில் விசுவரூபம் எடுத்துவிட்டான். என் அண்டையில் வாழுகிறவன், எனக்குத் தெரிந்தவன் பேசினவன் மாதிரி எல்லாம் ஆகிவிட்டான். அப்பொழுது திடீரென்று எதிர்பாராத சமயத்தில் அவன் சிரித்தான். பித்துக்

குளிச் சிரிப்பு அல்ல. ஆனால் யாரையும் கவனிக்க வைக்காத சிரிப்பு. யாரும் கவனித்தாலும் பார்க் இலோ, தெருவிலோ எதையோ வேடிக்கையாகப் பார்த்திருக்கவேண்டும் அல்லது வேடிக்கையான வார்த்தையை கேட்டிருக்கவேண்டும் எனக் கருதி அத் துடன் விட்டு விடுவார்கள். ஆனால் அது மாத்திர மல்ல. அவனுடைய பார்வையில் விசித்திரமில்லை. எல்லோரையும் போலத்தான் இருந்தான். இருந்தும் அவனிடம் அலாதியாக ஏதோ விசேஷம் இருந்தது.

அவன் யார், எங்கு வேலை செய்கிறான் என்று யோசிக்க ஆரம்பித்தேன். உள் மனத்தின் சர்க்கஸ் வித்தைகளில் நடக்கும் ரசமான வேடிக்கைகளுக்கு வரம்பே கிடையாது. என்னத்தைப் பார்த்து சிரித் துக் கொண்டிருந்தான் ? அதைத் தெரிந்து கொள்ள விரும்பினேன்; அவன் யார், ஜீவனோபாயத்திற்கு என்ன செய்து கொண்டிருக்கிறான்...நான் பலமுறை யோசித்தேன்.

' எழுத்தாளனோ ? சித்திரக்காரனோ ? சாஹித்ய கர்த்தனோ? அவன் யாராக வேண்டுமானாலும் இருக்கக்கூடும். அவனுடைய சோக முகத்திற்கும் சிரிப்புக்கும் சம்பந்தமில்லை. ஆனால் எப்பொழுது பார்த்தாலும் சிரித்துக் கொண்டிருந்தான்; உலகமே தன்னில் ஓர் அம்சம் மாதிரி. சிரிப்பதற்கு விஷயமோ அர்த்தமோ இல்லாதபோது பித்துக்குளி மாதிரி சிரித்துக் கொண்டிருந்தான். 'அவன் பித்துக் குளி யாக இருக்கமுடியாது.—காரண காரியமற்ற வாழ்வை அவனது உடை காட்டவில்லை. பாதிரியோ ? பலருக் குத் தலைமை வகித்து முன்னே வழி காட்ட வந்த

வனே?—தன் 'தலைமை' வேஷத்தைக் களைந்து அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத வகையில் ஜனங்களுடன் அளவளாவிப் பழக வந்தவனே? ஆனல் ஞாயிற்றுக்கிழமை யாச்சே. ஞாயிற்றுக்கிழமைதான் பாதிரியாருக்குப் பழி வேலை இருக்கும் தினம். இருந்தாலும் ஞாயிற்றுக்கிழமைகளில்தான் பார்க்குக்கு வருவதென்ருல் யாருக்கும் இயலும்? ஒரு சமயம் அவனை மனிகைக் கடைக்காரனே, பூக்கடைக்காரனே என்றெல்லாம் நினைத்தேன். இப்படியாக நினைத்துக் கொண்டு போனேன்; நினைப்புகளுக்கு முடிவில்லை.

திங்கட்கிழமை அதிகாலையில் அவன் பார்க்கில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். முந்தின நாளில் போல, மற்ற ஞாயிற்றுக்கிழமைகளில் போல, பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். ஜனங்கள், யந்திரங்கள் இவற்றின் ஓட்ட சாட்டம், உலகத்திலே பொழுது கழிவது எல்லாவற்றையும் சோம்பேறித்தனமான, சிரமமெடுத்துக் கொள்ள விரும்பாத, அதே "ஞாயிற்றுக்கிழமைக் கண்" கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான். அவசரப்படாமல், துடிப்பில்லாமல், (அவன் உயிருடன் இருக்கிறன் என்பதில் சந்தேகமில்லை) பார்த்துக் கொண்டிருந்தான். வேலையும் வேகமும், வேர்வையும், உழைப்பும், கஷ்டமும் மிகுந்த வாரநாள்: கோயில் மணிச்சத்தம் கேட்காது என்ற கவலையில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வார்த்தை ஒன்றும் பேசாமல் மற்ற நாட்களில்போலவே அமர்ந்து இடையிடையே தன்னையறியாமலே சிரித்துக்கொண்டு, தன்னை மனுஷக் காதுகளும் மனுஷக் கண்களும் கேட்டு, பார்த்துத்

துருவித் துருவி ஆராய்கின்றன என்பதே தெரியாமல் இருந்தான். கௌரவத்தின் முகச் சுளிப்பு இல்லாம லும், சோகமே இல்லாமலும் உட்கார்ந்து வெயில் காய்ந்து கொண்டு இருந்தான். ஆனந்தக் கண்ணீர் வரும்படி எழுதவில்லை. நாடக அரங்கத்தில் பாட வில்லை. தன் திறமையை உபயோகிக்கவில்லை. திறமை யுடன் விளையாடவில்லை. தன் திறமை கொண்டு தீர மாக வாழவில்லை. ஒரு வார்த்தையில் சொல்லப் போனால் சும்மா உட்கார்ந்து உயிரோடு உட்கார்ந்து, 'ஜீவகளை அமைந்த நிழலில்' சிறிது இருந்து எதி ரொலியற்று மறையும் வாழ்வு, என்ற தோற்றத்தில் அமிழ்ந்திருந்தான்.

பிறகு செவ்வாய்க்கிழமையும் அவனைப் பார்த் தேன். அப்புறம் புதன், விழாழன், வெள்ளி எனத் தினசரி அங்கு வந்தான். சுகவாசியோ; வேலை யிழந் தவனோ? அல்லது உபகாரச் சம்பளம் பெறுபவன் ஒருவனைப் பின்பற்றிக் கவனிப்பதாகவும் நம்ப ஆரம் பித்தேன். எந்த நினைப்பும் ரொம்ப நாள் நீடிக்க வில்லை. அதற்கப்புறம் ஒரு வாரம் அவன் வரவில்லை. நான் மட்டும் தனியாக மரத்தடியில் உட்கார்ந்து, அவன் இனிமேல் வரவே மாட்டானோ என எண்ணி யிருந்தேன். இங்கு உட்கார்ந்து, அவன் இனிமேல் வரப்போவதில்லை; நிச்சயமாகப் போயே போய்விட் டான் என நினைக்கையில், அந்த நபர் என்மனசில் பூதா காரமாக வடிவெடுத்து அந்தத் தெரு, பார்க் எல்லா வற்றையும் அவனைப் பற்றிய நினைப்பு என்ற வடிவம் எடுத்துக் கவித்து விட்டான். நான் உட்கார்ந்து வாசித் துக் கொண்டிருந்தேன். அவனை யாரென்று அடை

யாளம் கண்டு பிடிக்காமல், பேச்சுக்கொடுத்து நடை, நொடி, வார்த்தை பாவனைகளால் அனுமானித்து அவன் யாரென்பதைக் கண்டு பிடிக்காமல் விட்டு விட்டேனே என்பதில் வருத்தம்.

ஆனால் ஒரு ஞாயிற்றுக்கிழமை அந்த ஜப்பானி யன் திரும்பவும் பார்க் பெஞ்சுக்கு வந்து உட்கார்ந் தான். சிரிப்பைக் கொஞ்சங்கூட இழக்காமல் சோகம் முகத்தில் கோடு போட, முந்திப் பார்த்தமாதிரியி லேயே பார்த்தும், இடை யிடையே தன்னை யறியா மல் சிரித்தும், பார்க் பெஞ்சில் ஆயிரம் ஞாயிற்று முகங்களில் ஒன்றாகத் தன்னை யிழந்து உட்கார்ந்திருந் தான்.

இந்தச் சமயம் அவனிடம்போய் பேச்சுக் கொடுக் கத் தயங்கவில்லை. 'ஹலோ' என்றேன். அவன் என் னைப் பார்த்து அதிசயப்படாமல் சிரித்தான். "நான் எப்போதும் அந்த மரத்தடியில் உட்கார்ந்து வாசித் துக் கொண்டிருப்பேன். உன்னை எப்பொழுதும் பார்க் கிறது வழக்கம். ஒரு வாரமாகக் காணவில்லை. என்னவோ ஏதோ?" என்று சொன்னேன்.

"உட்காரேன்" என்றான்.

பெஞ்சியில் நகர்ந்து எனக்கு இடம் கொடுத்தான். "என் பெயர் த்ஸுமுரா, ஜப்பானில் ஷின்னே ஜில்லாவி லிருந்து வந்திருக்கிறேன்" என்றான். தன் பெற்றோர் கள் ஹீரோஷிமாவில் இருப்பதாகச் சொன்னான். ஹீரோ ஷிமாவில் பலரைத் தனக்குத் தெரியும் என்று அவன் எனக்குச் சொன்னான்.

"இனிமேல் நீர் வரமாட்டீர், அதனால் மறுபடி யும் பார்க்க முடியாது என்று நினைத்தேன்" என் றேன்.

அவன் சிரித்தான். அப்படி "ஒன்றும் பயப்பட வேண்டாம். நான் எப்பவும் இங்கேதான் இருப் பேன். உல்லாச யாத்திரை போக என்னிடம் பணம் கிடையாது" என்ருன்.

"இங்கே என்ன செய்கிறீர்?' என்று கேட் டேன்.

"ஷினேதே சலவைக் கம்பெனியில் வேலே. அங்கே நான் லாரி டிரைவர்; ஈஸ்ட்பேயில் உள்ள வீடுகள், ஆபீஸ்களுக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போய்ச் சாமான் கொடுத்து எடுத்து வருவது உத்தியோகம். பதினன்கு வருஷமாக அங்கேதான் வேலே. சில சமயம் அரை நேர வேலே. அதனுல்தான் வாரநாட்க ளில் இங்கு வந்து உட்கார்ந்திருப்பேன்" என்ருன்.

ஒரு நிமிஷம் கழித்து நான் போகவேண்டும் எனப் புறப்பட்டான். "சலவைக் கம்பெனியில் இராத்திரிச் சாப்பாடு ஆறு மணி; இப்போது புறப் பட்டால் தான் நேரத்திற்குப் போய்ச் சேரலாம்" என்ருன்.

மறுபடியும் சந்திப்பதாகப் பரஸ்பரம் சொல்லிக் கொண்டு பிரிந்தோம். முகத்தில் காணும் சோகத் தைப் பற்றியோ அல்லது வாழ்வின் வருத்தத்தைப் பற்றியோ அவன் ஒரு வார்த்தைகூடச் சொல்ல வில்லே. ஏன் சோர்ந்தாற் போலிருக்கிருன், எப்பொ ழுதும் சிரித்துக் கொண்டிருக்கிருன் என்பது பற்றி நானும் கேட்கவில்லே. நாங்கள் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லே. உலகத்துக்கே பொது வான ஒரு கேள்வியைக் கேட்டு அசட்டுப் பட்டம் கட்டிக்கொள்ள நாங்கள் விரும்பவில்லே. அந்தக் கேள்வியைக் கேட்க நாம் யார்? ஒவ்வொரு சிறு பேச்

சும், ஒவ்வொரு சிறு வம்பும், சிரிப்பைத் தூண்டும் விஷயமும் உலகத்தின் சோகத்திலேதான் பிறக்கிறது; அதுதான் உண்மை. மனிதர்கள் பரஸ்பரம் சந்தித்துக் கொள்ளுவது, குதூகலமோ, துக்கமோ எதுவானலும் உலகத்தின் சோகத்திலும் சத்தியத்திலும் பிறக்கிறது.

அவன் சலவைக் கம்பெனி லாரி டிரைவர். வண்டியை ஓட்டிக்கொண்டு போகும்போது அவன் முகத்தில் அறையும் காற்றைவிட எந்த விதத்திலும் சற்றும் வித்தியாசமில்லாத இந்த பார்க் காற்றுவாங்க வருவது ஏன்? அவன் வெறும் சலவைக் கம்பெனி டிரைவர்தான்; நகரத்தில்தான் வசிக்கிருன். ஓய்வுக்காகப் பார்க்குக்கு வருகிருன். பெரிய நினைப்புக்காக அல்ல; வாழ்விலிருந்து தப்பி வந்து அதை மறக்க அல்ல; கசப்பில்லாமல், 'பம்மாத்து' இல்லாமல், கனவை விரும்பாமல், கூரையைக் கிழித்துக்கொண்டு விழும் அற்புதங்களை எதிர்பார்க்காமல், அடுத்த மணியில், அடுத்த வினடியில் என்ன ஏற்பட்டாலும் என்ன என்று நிர்விசாரமாக உட்கார்ந்து சிரித்துக்கொண்டிருக்க வருகிருன்...........என்பன போன்றவையே அவனைப் பற்றிய விஷயங்கள்.

இதுதான் தினசரி நிகழும் 'மகா விஷயம். ஆகையால்தான் சோகம் துயரம் உலக வருத்தம் இவைகளின் காரணம் சிரிப்பிலும் மூங்கையான மகாகால மௌனத்திலும் அரை குறையாகத் தெரிகிறது.

Haddon & Co., 49, Badrian Street, Madras.